விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI

மல்லிகா மிக்சர் மாளிகை
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீபீஸ்
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 11 வியாழக்கிழமை (24.01.2002) தொலைபேசி 3378 ஒலி 36

## அரசு - புலிகள் சமாதானப் பேச்சில் தமிழ்க் கூட்டமைப்புக்கும் வாய்ப்பு
### சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)



இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் போது அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்குபற்றும் வாய்ப்புகள் உள்ளதாக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் தங்கியிருக்கும் பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் சமாதானத்தை ஏற்படுத்துவதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றார். அத்துடன் சகல அரசியல் சக்திகளையும் ஒன்றிணைத்து செயற்படுவதிலும் அவர் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளார்.

இந் நிலையில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தியுள்ள தமிழ்க் கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக எம்மை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனை மக்களும் ஏற்றுக் கொண்டே கடந்த பொதுத் தேர்தலில் தமது முடிவை சரியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இந் நிலையில் நாம் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது தமிழ்க் கூட்டமைப்பினரையும் அதில் ஈடுபடுத்த வாய்ப்புக்கள் இருப்பதாக தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார். (இ)

## வன்னிக்கு மருந்துப் பொருள் அனுப்ப உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு மருந்துப் பொருட்கள் அனுப்பிவைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையா? என்பது பற்றி ஆராய்வதற்கு இன்று உயர் மட்ட மகாநாடு ஒன்று பாதுகாப்பமைச்சில் நடைபெற உள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் ஆட்சியின் போது இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு மருந்துப் பொருட்கள் பாதுகாப்பமைச்சின் அனுமதியுடனேயே அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. (வ)

## மோதல் தவிர்ப்பை கண்காணிக்க
# நாகர்கோவில் இராணுவ முகாமிற்கு
# அமைச்சர் மொறகொட விஜயம்

### தளபதி பலகல்லவும் உடன் சென்றார்

(நமது நிருபர்)

**யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களில் காவல் கடமையில் உள்ள படை வீரர்களை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மலிந்த மொறகொடவும், இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் லயனல் பலகல்லவும் சந்தித்து உரையாடியுள்ளனர்.**

**இந்தச் சந்திப்பின் ஒரு கட்டமாக நாகர் கோவிலிலுள்ள இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களில் உள்ள படை வீரர்களின் சேம நலன்களை விசாரித்தனர்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பையும் ஐக்கயி தேசிய முன்னணி அரசின் மோதல் அடுத்து அமைச்சர் மலிந்த மொற கொடவும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும் நேற்று உள்ள இராணுவ முன்னரங்க எல்லைப் பிரதேசத்தில் கடைமை புரியும் படை வீரர்களைச் சந்தித்துள்ளனர்.

## பொருட்களின் விலை வன்னியில் சரிகிறது

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் பிரதேசத்திற்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு அங்கு பொருட்கள் தாராளமாகச் சென்றதை அடுத்து 110 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 1 லீற்றர் மண்ணெண்ணெய் 30 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும் 14 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு சயிக்கிள் 6 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

அறிவிப்பையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மோதல் தவதிர்ப்பு அறிவிப்பையும் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும் நேற்று முன்தினம் யாழ் குடாவில் புரியும் படை வீரர்களைச் சந்தித்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# இருதரப்பு யுத்த நிறுத்தம் இன்று அமுலுக்கு வரும்?

(மட்டக்களப்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையே இன்று இருதரப்பு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரலாம் என்று நம் ்கமான வட்டாரங்களில் இருந்து ூகவல் வெளியாகியுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்தும் இவ்யுத்த நிறுத்தம் தொடர்பான ஆவணங்கள் நோர்வே ஏற்பாட்டாளர் குழுவினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதனைக் கண்காணிப்பதற்கான குழுவில் சர்வதேச மற்றும் உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இராஜ தந்திர வட்டாரங்களில் தகவல்கள் கசிந்துள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே பிரதமர் ரணிலின் கொள்கை விளக்க உரையும் அமைந்திருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

(இ)

# பொலிஸார் இராணுவத்தினர் நேற்று கண்டியில் மோதல்

## எட்டுப்பேருக்கு காயம்

கண்டியில் போக்குவரத்து பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நேற்றுக் காலை கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. கண்டி தலதாமாளிகைக்கு அருகில் உள்ள குயின்ஸ்ரன் கோட்டலுக்கு முன்பாக இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:- போக்குவரத்து நிலைமைகளை சீர்செய்வதற்கு கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரை வழிமறித்த

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்குவதில் பிரதமர் அவதானமாக செயற்பட வேண்டும்

## முன்னாள் அமைச்சர் கதிர்காமர் ஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கும் விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவதானமாக செயற்பட வேண்டும் இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கதிர்காமர் இதனை தெரிவித்தார் அங்கு அவர் மேலும் பேசுகையில்:

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் மக்கள் ஆர்வமாக இருக்கின்றார்கள். ஆனால் அச்சமாதானத்தை ஏற்படுத்த எந்த விலையையும் கொடுக்கலாம் என்ற நிலையில் மக்கள் இல்லை.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் அமெரிக்காமீது இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் எதிரொலி விடுதலைப் புலிகளை சர்வதேசத்தில் பல அழுத்தங்களுக்கு உட்படுத்தியது.



இதன் விளைவே விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்கு முன்வரச் செய்தது. இந்நிலையில் சர்வதேச நிலைமைகள்

(10ம் பக்கம் பார்க்க)

### உள்ளே

பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளி விபரவியல் முறையான சற் ஸ்கோர் (Z ஸ்கோர்) பற்றி தேசிய கல்வி ஆணைக்குழுத்தலைவர் பேராசிரியர் ஆர்.பி. குணவர்த்தனா எழுதிய விளக்கக்கட்டுரை.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகள் சிங்களக்கைதிகளை விடுவித்ததுபோல் அரசும் தமிழ்கைதிகளை விடுவிக்க வேண்டும்

## பெண்கள் அமைப்பின் பிரதிநிதி கோரிக்கை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் பத்துசிங்கள யுத்தக்கைதிகளை விடுதலை செய்தது போல் அரசாங்கமும் நல்லெண்ண அடிப்படையில் தென்னிலங்கையில் உள்ள சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவேண்டும் இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதி திருமதி விசாகதர்மதாஸ அரசைக் கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த திங்கட்கிழமை தமது பாதுகாப்பில் உள்ள பத்து யுத்தக்கைதிகளை சமாதான முயற்சிக்கான நல்லெண்ண அடிப்படையில் விடுவித்திருந்தனர்.

இதுதொடர்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதி திருமதி விசாகதர்மதாஸ கருத்துத் தெரிவிக்கையில்.

தென்னிலங்கையில் சிறைகளில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணாமல் போன படையினரின் சங்கத் தலைவர் ஏ. ஈ. ாணயக்க காரா கருத்து வெளியிடுகையில், சமாதான முயற்சிகளின் ஒரு அங்கமாக நல்லெண்ண அடிப்படையில் பத்து யுத்தக் கைதிகளை விடுதலை புலிகள் விடுவித்தது போல், அரசாங்கமும் தென்னிலங்கைச் சிறைகளில்உள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்க வேண்டுமென்று கூறியுள்ளார் (வ)

# கடற்படையினர் கைப்பற்றிய புலிகளின்படகு விடுவிக்கப் பட்டுள்ளது

## சிஹலஉறுமய அறிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற் பரப்பில் படையினர் கைப்பற்றிய விடுதலைப்புலிகளின் மூன்று படகுகளையும் மற்றும் அதில் பயணம் செய்த புலி உறுப்பினர்களையும் உயரதிகாரிகளின் உத்தரவிற்கு அமைய கடற்படையினர் விடுதலை செய்துள்ளனர்.

இவ்வாறு சிஹல உறுமய வெளியிட்ட அறிக்கைஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக ஜலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது முல்லைத்தீவை நோக்கி கடந்த 21ம்திகதி அதிகாலை வேளை ஆறு படகுகள் சென்று கொண்டிருந்தன.

இதனைக் கடற்படையினரின் 'நந்திமித்திர' கப்பல் அவதானித்தது உடனடியாக காங்கேசன்துறை கடற்படை தளத்தில் இருந்து பீ.472 பீ. 492, ஆகிய இரு டோறாப்படகுகளும் முல்லைத்தீவு கடற்படை தளத்தில் இருந்து பீ.464 பீ.469 ஆகிய இரு டோறாப்படகுகளும் அழைக்கப்பட்டு குறித்த ஆறு படகுகளையும் கைப்பற்றும் நோக்கில் அவை துரத்தப்பட்டன

எனினும் அந்த ஆறுபடகுகளும் மிகவேகமாகச் சென்றதனால் அவற்றை சரணடையுமாறு கடற்படை உத்தரவு பிறப்பித்தது ஆயினும் அவைஅதனையும் மீறி வேகமாகச் சென்றன.

இதனால்படகுகளை நோக்கி பீரங்கி வேட்டுக் கள்தீர்க்கப் பட்டன.

கடற் படையினரின் தீவிர முயற்சியினால் பொருட்களை ஏற்றிச் சென்ற மூன்று படகுகளும் தப்பிச் சென்றபோதும் ஏனைய மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டதுடன். அதில் பயணம் செய்த புலி உறுப்பினர்களும் கைது செய்யப் பட்டனர்.

படகுகள் கைப்பற்றப்பட்ட விடயம் தொடர்பாக கடற்படையினர் தமது உயரதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, என்ன நடவடிக்கை மேற்கொள்வதென்ற கட்டளையை எதிர் பார்த்திருந்தனர்.

அப் போது படகுகளையும் விடுதலைப்புலி உறுப்பினர்களையும் விடுவிக்கும்படி உத்தரவு அனுப்பப்பட்டது.

இதனையடுத்து படகுகளும் புலி உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டனரென்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன், யுத்த நிறுத்தம் செய்துள்ள முதல் மாதத்திலேயே விடுதலைப் புலிகள் ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு தொடர் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும்,

இவற்றை தமது கட்சியின் கண்காணிப்புப் பிரிவு தொடர்ந்தும் அவதனித்துவிபரங்களை வெளியிடுமென்றும் சிஹல உறுமயவின் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(இ)

### சமாதானம் ஏற்பட்டதும்

# புலி உறுப்பினர்களுக்கு அரச வேலை வாய்ப்பு

## தொழில் அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இனப்பிரச்சினை தொடர்பாக எடுத்துவரும் சமாதான முயற்சி வெற்றி அளிக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களுக்கு அரசாங்கம் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை தயாரிக்கவுள்ளது.

இவ்வாறு தொழில் அமைச்சர் மகிந்த சமர சிங்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்கா மேலும் தெரிவிக்கையில் சுவிற்சலாந்தில் தஞ்சம் புகுந்திருக்கும் முப்பதுஆயிரம் தமிழர்கள் இலங்கையில்சமாதானம் ஏற்பட்டவுடன் நாடு திரும்பத்தயாராக உள்ளனர்.

இதே போல் ஏனையநாடுகளில் உள்ளவர்களும் இலங்கைக்கு திரும்பக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# விஞ்ஞானக் கண்காட்சி நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்கத்தின் நான்காவது விஞ்ஞானக்கண்காட்சி நேற்றுயாழ். இந்துமகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 15ற்கும் அதிகமான முன்னணிப்பாடசாலைகளின் காட்சிப்பொருட்கள், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் விவசாயபீடம், தாவரவியல் துறை ஆகியவற்றின் காட்சிப் பொருட்கள் மற்றும் ஐ. பீ. எம். எஸ் கணனிப் பயிற்சி நிறுவனத்தின் கணனிக் கண்காட்சிப் பொருட்கள் ஆகியன பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

இவ்விஞ்ஞானக் கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும் என்று விஞ்ஞானசங்கம் அறிவித்துளது. (இ)

## பேச்சாளராக சரத் அமுனுகம

பொது ஜனஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளராக சரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார். (வ)

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்களைவிசாரிக்கநீதிமன்றம்

## அமைச்சர் லொக்குபண்டார அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களின் வழக்குவிசாரணைகளைதுரிதப்படுத்துவதற்கு விசேட உயர் நீதிமன்றம் ஒன்றை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளதாக நீதி மற்றும் சட்ட சீர் திருத்த அமைச்சர் டபிள்யூ ஜே. எம் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

அரசும் விடுதலைப் புலிகளும்சமாதானநடவடிக்கையாக யுத்த நிறுத்தத்தைகடைப்பிடித்து வரும் இவ்வேளையில் நல்லெண்ண நடவடிக்கையாகவே இந் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில்உரையாற்றும்போது அமைச்சர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

வெலிக்கடை சிறைச்சாலையில் இயங்கவுள்ள இந் நீதிமன்றம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வழக்குகளை மாத்திரமே விசாரணை செய்யும் என்றும் கூறினார் (ந-4)

---

## சிறு விளம்பரம்

### ஒப்படைக்கவும்

நல்லூரர்சிவன்கோவிலுக்கு முன்பாக, முக்கியமான 'பாக்' ஒன்று தவறவிடப்பட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பாக்கில் உள்ள திறப்பு. மற்றும் கண்ணாடி என்பனவற்றை வலம்புரிக் காரியாலயத்திலோ அன்றி நல்லூர் சிவன் கோவிலிலேயோ ஒப்படைத்து உதவவும்.

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு அருள் மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மணவாள கோல நவோத்ர சகஸ்ரசங்காபிஷேகம் எதிர்வரும் 27 ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-5)

### கால் நடை வைத்திய பணிமனை அமைப்பு

(மானிப்பாய்)

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் உள்ள அரச காணியில் கோப்பாய் பகுதிக்கான கால் நடை வைத்தியஅதிகாரி பணிமனை கட்டப்படவுள்ளது.

இதற்கான காணியை பொறுப் பேற்று வழங்குவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார்.

தற்போது கோப்பாய் கால் நடை வைத்தியஅதிகாரி பணிமனை, நீர்வேலியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (செ-5-223)

### கராத்தே சங்கத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கராத்தே சங்கக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணிக்கு யாழ். மாவட்ட விளையாட்டுப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அனைத்து நிருவாகக் குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் டி. அன்ரோ டினேஸ் கேட்டுள்ளார்.

இக் கூட்டம் 3.30 மணிக்கு நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்து தெரிந்ததே. (செ-5)

### நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினகலாமண்டபத்தில் நடைபெற்று வரும் முத்தமிழ் விழாவின் 6ம்நாள் நிகழ்வுகள் இன்று யாழ். பல்கலைக்கழக பௌதீகத் துறைத் தலைவர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில்3.30 மணி தொடக்கம் இரவு 7.30மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரம்ம ஸ்ரீ ஆ.கந்திரசேகரக்குருக்கள் ஆசியுரையை வழங்குவார்.

தொடர்ந்து எம்.பிரேமானந்தா குழுவினரின் மங்கல இசையும் றொபேர்ட் குழுவினரின் வார்த்திய சங்கமம் மற்றும் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின்இசைக்கச்சேரி என்பன இடம்பெறும். (செ-5)

### மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் இவ் வாண்டுக்கான முதலாவது மாதாந்தக் கூட்டம எதிர் வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாநகரசபை மண்டபத்தில் புதிய மேயர் செ. கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-19)

### வலைப்பந்து மத்தியஸ்தர் சங்கப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பயிற்சி எதிர்வரும் திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கப் பகுதியில் இடம் பெறவுள்ளது.

இப்பயிற்சியில் 'சி' தரத்தில் தோற்றியவர்களும்' பி' தரத்தில் சித்தியடைந்தவர்களையும் தவறாது சமூகம் கொடுக்குமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் பி. யூலிப் பிரகாஷ் அறிவித்துள்ளார். (செ-10)

### வறட்சிப் பாதிப்பு இந்தியா உதவி

(கொழும்பு)

நாட்டில் வறட்சியால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில இந்தியா அத்தியாவசியப் பொருட்களை வறட்சி நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

45 மெற்றிக் தொன் அரிசி 40 மெற்றிக் தொன் சீனி, 50 மெற்றிக் தொன் கோதுமை மா போன்ற அத்தியாவசியப் பொருட்களை இந்தியா உதவியாக வழங்கியுள்ளது.

இலங்கை-இந்தியநல்லுறவின் சின்னமாக இந்தஉதவி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியதூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (எ-4)

### ஒன்றுகூடல்

வலிகிழக்கு பிரதேச சபையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை10.00மணிக்கு வலிகிழக்குப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் செயலாளர் எஸ். குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(இ-238)

### பூரானால் கடியுண்டவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் வெள்ளைப் பூரானால் கடியுண்ட செல்வவனராசன் (வயது 21)என்ற இளைஞன் யாழ்' மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் வீட்டில் உள்ள ஓலையை துப்பரவு செய்த பொழுதே பூரான் கடித்ததாக அவர் தெரிவித்தார்.

இது போன்ற சம்பவங்கள் அப்பகுதியில் அடிக்கடி இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. செ-10)

# "Z"ஸ்கோர் முறை பற்றிய விளக்கம்

இவ்வாண்டின் பல்கலைக் கழக அனுமதிக்கு மாணவர்களை வரிசைப்படுத்துவதற்கு இஸட்- ஸ்கோர் எனப்படும் புள்ளிவிபரவியல் முறை பயன்படுத்தப்படுகிறது. இது உயிரியல், பௌதீகவிஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் மாவட்ட அடிப்படையிலும், அகில இலங்கை ரீதியிலும் நடை முறைப்படுத்தப்படும். பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றமாணவர்களுக்கு இதன் அடிப்படையிலேயே பரீட்சைத் திணைக்களம் இஸட்- ஸ்கோர் வெட்டுப் புள்ளிகளை வெளியிடும்.

**மாவட்டக் கோட்டாவில் மாற்றமில்லை**

மொத்தப்புள்ளிகள் என்ற அடிப்படைக்குப் பதிலாக மிகவும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இஸட்- ஸ்கோர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இபபோதுள்ள பல்கலைக் கழக கோட்டா கொள்கை இதனால் மாற்றப்படவில்லை. எனவே இப் புதிய முறை அறிமுகம் செய்யப்பட்டதால் மாவட்ட கோட்டா முறை கைவிடப்பட்டுள்ளது என்று கருதுவது தவறு. மாவட்ட கோட்டா முறையில் இப்போது ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் (கலைப்பிரிவு தவிர) பல்கலைக்கழக அனுமதி பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

முழுஇலங்கைக்குமானமெறிற் ----40 சதவீதம்
மாவட்ட அடிப்படை ---- 55சதவீதம்
பின் தங்கியமாவட்டங்களுக்கு மேலதிகம் ---05 சதவீதம்

மாவட்ட அடிப்படை என்பது 25 மாவட்டங்களுக்கும் குடிமக்களின் விகிதாசாரப்படியும், முழு இலங்கையினதும் குடிசன விகிதாசாரப்படியும் கோட்டா வழங்கப்படுவதாகும்இதேவேளைகல்வியில்பின் தங்கிய மாவட்டங்களான 13 மாவட்டங்களுக்கும் மேலதிக 5 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது. இதனை பல்கலைக்கழக மானியக்குழு செய்யும். பின் தங்கியமாவட்டங்களாக நுவரெலியா, அம்பாறையாழ்ப்பாணம்கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியாதிருகோணமலை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலனறுவ, பதுளை, மொனரகலை என்பன வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில்மாணவர்கள் பெற்ற இறுதி இஸட-ஸ்கோர் இன்படி அவர்கள் வரிசைப்படுத்தப்படுகின்றனர். பின்னர் பல்கலைக்கழக மானியக்குழு இஸட்-ஸ்கோர் வெட்டுப்புள்ளியைஒவ்வெருபாடத்திட்டத்திற்கும் தனித்தனியாக முடிவு செய்கிறது. ஒவ்வொருமாவட்டத்திற்கும்இவ்வாறுதீர்மானிக்கப்படுகிறது.

**வெட்டுப்புள்ளியும் சராசரிப்புள்ளியும்**

மொத்தப் புள்ளி அல்லது சராசரிப்புள்ளி-2000ஆம் ஆண்டுவரை மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளினடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டனர். ஆனால் 2001 (2000A/L)இல் சராசரிப் புள்ளிகளின் அடிப்படை பயன்படுத்தப்பட்டது. காரணம் ஒரு பகுதி மாணவர்கள் பழைய பாடத் திட்டத்தின் அடிப்படையில்நான்கு பாடங்களுக்கு தோற்றும் அதே வேளை பதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் மூன்று பாடங்களுக்கு இன்னுமொரு பகுதி மாணவர்கள் தோற்றினர். இதனால் மொத்தப் புள்ளி முறையிலாயினும் சரி சராசரிப்புள்ளி முறையிலாயினும் சரி தேர்ச்சித்தர ஒழுங்கை(**Merit order**)முடிவு செய்வதுபாரதூரமான குறைபாடேயாகும்.

பாடங்களில் கஷ்டமான பாடங்களும், இலகுவான பாடங்களும் உள்ளன. சுலபமாக புள்ளிகளை பெறக் கூடிய பாடங்களும், சிரமத்துடன் குறைந்தளவு புள்ளிகள் பெறக்கூடிய பாடங்களும் உள்ளன. இதனால் பலபாடங்களினதும்புள்ளிகளைதிரட்டி, மொத்தப் புள்ளியை பயன்படுத்தி மாணவருக்கு தரவரிசையைஒழுங்கு செய்வதுநியாயமற்றது. மூன்று பாடங்களுக்கு தோற்றியவர்களினதும் நான்கு பாடங்களுக்குதோற்றியவர்களினதும் மொத்தப் புள்ளிகள் பொருந்தா.

**எண்ணிக்கை சமம் பெறுமதி வேறு**

முக்கியமான விடயம்என்னவென்றால் எல்லாப்பாடங்களும் ஒரேயளவு கஷ்டமானவை என்றும் அல்லது எல்லமே இலகுவானவைஎன்றும், என்ன பாடமென்றாலும் புள்ளிகள் ஒரே பெறுமதியுடையவை என்றும் கொள்வது தவறான ஊகமாகும். ஒவ்வொரு பாடத்தினையும் பொறுத்து ஒரு புள்ளியின் பெறுமதி வித்தியாசமானது. எண்ணிக்கை பெறுமதியை எடுத்துக் காட்டுவதில்லை. 10 மாம்பழங்களும் 10 கொய்யாப்பழங் களும்ஒரு பெறுமதியானவையா? எண்ணிக்கை சமம் ஆனால் பெறுமதி வேறு. அதுபோலவே விவசாயப்பாடத்தின்50 புள்ளிகள் பௌதீகப் பாடத்தின் 50 புள்ளிகளுக்கு சமமில்லை. இதனாலேயே புள்ளிகளை பாட அடிப்படையில் தரப்படுத்துதல் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகும்.

இஸட்-ஸ்கோர்முறையில்ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவர் பெற்ற புள்ளிகள் ஒரு குறிப்பிட்ட தர அளவுக்கு மாற்றப்படுகின்றன. பின்னர் மூன்று பாடத்தின் அல்லது நான்கு பாடத்தின் சராசரி இஸட்-ஸ்கோர் பயன்படுத்தப்பட்டு இறுதி மெறிற் ஒழுங்கு முடிவு செய்யப்படுகிறது.

இரண்டு வருடங்களாக கல்வி மான்கள், படிப்பாளிகள் மட்டத்தில் ஆராயப்பட்டபின் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இம்முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அமுல் செய்கிறது.

$$\text{இஸட்-ஸ்கோர்} = \frac{\text{புள்ளிகள்} - \text{பாடத்திற்கான சராசரிப்புள்ளி}}{\text{புள்ளிகளின் குறியளவு விலக்கம்}}$$

**Standard deviation of Maks**

இஸட்-ஸ்கோர் முறை மொத்தப்புளிமுறையிலும், சராசரி புள்ளி முறையிலும் மேலானது. பல நாடுகளின் தேசியபரீட்சைகளில் பயன்படுகின்றது.

# இல, கணக்காளர் சேவை பரீட்சார்த்திகளுக்கான கூட்டம் கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கணக்காளர் சேவை வகுப்பு II, தரம் II ற்கு இவ் வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ள கீழ்குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகனள இம் மாதம் 31 ஆம் திகதி மு. ப. 9.00 மணிக்கு கொழும்பு- 7, குணபாலமலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் நடைபெறவிருக்கும் கூடடத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கே. சிவாஜினி 1/333, ஆடிய பாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

கே. கமலரூபன் சிவன் கோயில் வீதி, எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள்.

என். யோகேந்திரராஜா 15/14, ஏ, சங்கிலியன் வீதி நல்லூர்,

என். றமேஸ் இலுப்படிச் சேனை, செங்கலடி.

ஏ. ஜே. எலிசன் மல்லியடி, இளவாலை.

ரி. மஞ்சுளா அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு.

என். சற்குணேஸ்வரன அரச விடுதி, பிரதேச செயலகம், மூதூர்.

ஆர். சுகந்தினி 32/ 15, ஓட்டு மடம் வீதி, யாழ்ப்பாணம்.

வி. கலைச்செல்வன் விடத்தற்பளை, மிருசுவில்.

எஸ். குகபாலன் காந்தியூர், புலோலி தெற்கு.

வி. வேல்நிதி வேல்வாசம் பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

ஆர். கலைச்செல்வி ஸ்கந்தவராசா, இராமலிங்கம் வீதி, கல்வயல்.

எம். சிவகுமாரி 4, மன்னார் வீதி, வவுனியா.

என். காயத்திரி சரஸ்வதி வித்தியாலயவீதி, கரவெட்டி.

ரி. சுமங்கலா 2 வது ஒழுங்கை, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

கே. யோகேந்திரன் வவுனியா.

எம். வசந்திமாலா கைதடி கிழக்கு, கைதடி.

# பிறிமா நிறுவனத்தின் ஏகபோக உரிமையை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

பிறிமா நிறுவனத்திற்குஅரசாங்கத்தினால்வழங்கப்பட்ட கோதுமை மா தொடர்பான ஏகபோக உரிமையை ரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் உலகச் சந்தையின் விலைக்கு ஏற்ப கோதுமை மாவின் விலையை 3ரூபா 50 சதத்தாலும் பாணின் விலையை 1ரூபா 50 சதத்தாலும் குறைக்க முடியும்என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ-3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட 17 வயதுக்குட்பட்ட, 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பி. ப. 4. 30மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாதுகலந்துகொள்ளுமாறுகூடைப்பந்தாட்ட செயலாளர் அறிவித்துள்ளார். (செ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான சலனசித்திரம் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையின் விசேடகலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி. ப.3.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்திரைப்படத் தொழில் நுட்பவகுப்புகளின்செய்முறை வகுப்புதொடர்பாகவும் சலனசித்திரம் யாழ்ப்பாணக்கிளையின் எதிர்காலத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட இருக்கிறது. அத்தோடு வலிகாமக் கிளையின் நிர்வாகமும் தெரிவு செய்யப்பட இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (செ-106)

# மட்டுநகரில்புலிகள் கைதாகி விசாரித்த பின் விடுதலை

(கொழும்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள கராஜ் ஒன்றில் தமது மோட்டார் சைக்கிளைத் திருத்தும் பொருட்டு நின்ற இரு விடுதலைப் புலிகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் கைது செய்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் சென்று நீண்ட நேரமாக அவர்களை விசாரித்தனர்.

கடந்த சனிக்கிழமை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சைனட் வில்லைகள், மைக்கிறோ பிஸ்டல், இரகசிய தொலைத் தொடர்புசாதனம் ஆகியவற்றை அவர்கள் வைத்திருந்ததால்குற்றவியல் சட்டத்தின் கீழ்அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பொலிசார் தெரிவித்ததாகவும்,

அப்போது அவர்கள் அவ்வாறு நடவடிக்கை ஏதாவது எடுத்தால் தாம் சைனட் வில்லைகளைக் கடித்து தற்கொலை செய்யப் போவதாக எச்சரித்ததாகவும் தகவல் திணைக்களம் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் இரவு 9·30 மணியளவில் கத்தோலிக்க மதகுரு, மட்டக்களப்பு வர்த்தகர்சங்கத்தலைவர் ஆகியோர் முன்னிலையில், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதைத் தவிர்க்குமாறுகூறிஅவர்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லுமாறு விடுதலை செய்ததாக மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பத்திரிகைக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பற்றி அவதூறாக எழுதிய கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் மீது மானநட்ட வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## படையினரால் சிங்கறால் ஏற்றுமதி

(திருநெல்வேலி)

சுழிபுரம் பகுதி மீனவர்களால் பிடிக்கப்படும் சிங்கறால்களை படையினர் கொள்வனவு செய்து, கொழும்புக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். (உ-43)

# தேர்தல் திணைக்களம் அரச ஊழியர் விபரத்தை அனுப்புமாறு கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது, தேர்தல் சேவையை வழங்க முடியாத அரச ஊழியர்களின் பெயர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு தேர்தல் திணைக்களம் அரச நிறுவனங்களிடம் கோரியுள்ளது.

இது தொடர்பான, சுற்று நிருபம் சகல அரச நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மா அதிபர், புகையிரத பொது முகாமையாளர், சுகாதார சேவைப்பணிப்பாளர் ஆகியோரை தவிர்ந்த ஏனையோரை தேர்தல் கடமைகளுக்கு சமுகம் அளிக்குமாறு அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ-7-4)

## கலைஞானி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் 'மாமனிதர்' கலைஞானி அ. செல்வரத்தினத்தின் முதலாவது மாதநினைவாக எதிர்வரும் 27ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறு சந்நியான் ஆச்சிரமத்தில் மு.ப 9.30 மணிமுதல் நினைவுப் பிரார்த்தனையும் ஞாபகார்த்த உரைகளும் இடம்பெறும் நண்பகல் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

மாமனிதர்கலைஞானிஅருங்காட்சியகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-106)

# விசா இல்லாமலேயே இலங்கைக்கு வரலாம் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் முன்கூட்டியேவிசா பெற்றுக் கொள்ளாமல் இலங்கைக்கு வரமுடியும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி பொக்குகே தெரிவித்துள்ளார்.

ஐரோப்பியநாடுகளிடையே நடைமுறைப்படுத் தப்படும் முறையினைப் பின் பற்றியே இலங்கையில் இது அமுல்படுத்தப்பட்டதுஎன்பதோடு, இலங்கையினை முன்மாதிரியாகக் கொண்டு ஏனையதெற்காசிய நாடுகளும் செயற்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-8)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைக்கப்பட்ட கைப்பணியாளர் சங்கக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தொழிற்றுறைத் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-75)

# ரணிலின் கொள்கை விளக்கவுரைக்கு லக்ஷ்மன் கதிர்காமர் வரவேற்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்று வரும் யுத்தம், இனப்பிரச்சினை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை விளக்க உரையை பொதுஜன ஐக்கிய முன்னணி வரவேற்றுள்ளது.

பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமர்ப்பித்த, புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது கொள்கைவிளக்க உரையின் விவாதம் நேற்று நடைபெற்றபோது இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்; நாட்டுமக்களின் நன்மைகருதி புதிய அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளானது வரவேற்கத்தக்கதோடு அவசியமான தொன்றாகவும் காணப்படும் இக் காலகட்டத்தில் அவை தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாக இருந்து செயற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டிய அவசியத்தை மக்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள் என்பதுடன் அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக வன்னிப் பொருளாதாரத்தடையை நீக்கி பொருள்கள் தாராளமாக எடுத்துச் செல்லப்படுவதை தான் வரவேற்பதாகவும்;

அத்தோடு தமிழீழ விடுதலைப்புலிகள் மீது உள்ளூரில் விதிக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக அரசாங்கம் காட்டிவரும் கரிசனையையும், இனப்பிரச்சினை தொடர்பாக தீர்க்கக்கூடிய திட்டங்கள் சம்பந்தமாக ஏனைய கட்சிகளுக்கு விளக்கம் கூறப்படும் என்ற பிரதமரின் கொள்கையை தான் வரவேற்றுள்ளதாகவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கட்சிச் சார்பில் விவாத உரையை ஆரம்பித்து வைத்த அமைச்சர் வி. ஜ. மு. லொக்குபண்டார கொள்கைவிளக்க உரை தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியிடமிருந்து தாம் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தது போலவே ஆதரவு கிடைத்ததைஇட்டு நன்றியுடன் பாராட்டையும் அக்கட்சிக்கு தெரிவித்துள்ளார். (செ-8)

## வடமராட்சி கிழக்கு மக்கள் அமைச்சருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு, குடத்தனை, மணற்காடு, அம்பன் ஆகிய பகுதிகளுக்கு மின்பிறப்பாக்கி மூலமாவது மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதிப் பொதுமக்கள் இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம் மகஜரில் தமது பகுதிகளை ஒதுக்கிவைக்காமல் பார்வையிட வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(செ-43)

## ஆ. மகாதேவன் நினைவு புலமைப் பரிசில் நிதியம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பேராசான் அமரர் ஆறுமுகம் மகாதேவன் நினைவுபுலமைப் பரிசில் நிதியம் விரைவில் குடும்பத்தினரது அனுமதியுடன் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வருடா வருடம் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் எமது மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவு, கணிதப்பிரிவுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இப் பரிசில் வழங்கப்படும் என்றும் அவர்கள் முதன் முறை பரீட்சைக்குத் தோற்றிபவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் இம் மாணவர் கற்றபாடசாலை அதிபர்களூடாகப் பாடசாலைப் பொது நிகழ்வு ஒன்றில் வைத்து இப் பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ. சி. நடராஜா தெரிவித்தார்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி உரும்பிராயில் நடை பெறும் அமரரது நினைவு அஞ்சலி நிகழ்வில் "இந்நிதியம் ஆரம்பித்து வைக்கப்படும் மேலதிக விபரங்களுக்குகுரும்பசிட்டிமக்கள் தொடர்பகம, உரும்பிராய் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும்.

(செ-106)

## கடந்த 19 வருடகாலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்திற்காக 50 ஆயிரம் கோடி ரூபா செலவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் கடந்த பத்தொன்பது வருடகாலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கு சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் செலவிடப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் அவர் சிறப்புரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த வருடத்தில் மாத்திரம் வடக்கு - கிழக்கில் யுத்தத்திற்காக சுமார் 8 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்நிதிகள அரைவாசி வரவு செலவுத்திட்டம் மூலமாகவும் ஏனையவை அரசாங்க வங்கிகள் மூலமும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இதேவேளை கடந்த கால யுத்தத்தினால் பொலிஸார் உட்பட முப்படையினர் இருபதாயிரம் பேர் தமது உயிரைத்தியாகம் செய்துள்ளனர். மேலும் வெளிநாட்டு ஊடகங்களின் தகவல்களின் படி நாட்டில் சுமார் அறுபது ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், பெருமளவானோர் அங்கவீனர்களாக உள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-7-4)

## உள்ளூராட்சித்தேர்தலில் அதிகளவு பெண்கள் போட்டியிட வேண்டும்

(கொழும்பு)

வடக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் பெரும்பாலான பெண்கள் போட்டியிடவேண்டும் என்று மகளிர் விவகார அமைச்சர் அமர பியசீலி ரட்ணாயக்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

சகல துறைகளிலும் சரிநிகர் சமமாக வளர்ந்துவரும் மாதர்கள் அரசியலிலும் சளைத்தவர்கள் அல்ல, என்பதை நிரூபிக்கும் விதமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் வாழ்வு எடுத்துக்காட்டுகின்றது.

எனவே சகல அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர் பட்டியலில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி நிலையங்களில் ஒரு சதவீதமாக கடமையாற்றும் மாதர்களைப் 10 சதவீதமாக உயர்த்தும் நோக்குடன் சகல கட்சிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தப் போவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் (செ-8)

# ஹர்த்தால் நடத்துவதற்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்

### வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இனிமேல் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுப்பவர்கள், ஹர்த்தால் நடைபெறும் நாளுக்கு ஒரு கிழமைக்கு முன்னர், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத்திற்கு எழுத்து மூலம் அறியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தற்போது நடத்தப்படும் ஹர்த்தால், கடையடைப்பு போன்ற நிகழ்வுகள் எழுந்தமானமாக மேற்கொள்ளப் படுவதனால், வர்த்தக சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

எனவே ஹர்த்தால் நடத்துவது பற்றி எழுத்து மூலமாக அறிவித்தால் எமது சங்கம், குடாநாட்டில் உள்ள மற்றைய வர்த்தகசங்கச் செயற்குழுவுடன் தொடர்பு கொண்டு தீர்மானம் எடுத்த பின் கடையடைப்பிற்கான திகதி பற்றி பத்திரிகை மூலம் அறிவிக்கும்.

அப் பத்திரிகை குறிப்பில் மேலும், பொருட்கள விலை அதிகரிப்பு தொடர்பாக யாழ். அரச அதிபர் கப்பலில் பொருட்கள் கொண்டுவரும் வர்த்தகர்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்கள் கொண்டுவரும் விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தலைவர் ஆகியோர்களுடன் கொழும்பில் பொருட்களின் விலை, பொருட்களை கொழும்பிலிருந்து யாழ். கொண்டுவர ஏற்படும் செலவு ஆகியவை பற்றி ஆராய்ந்து அதன்படி விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வர்த்தகர்கள் இன்றைய போர்கால சூழ்நிலையையும், மக்கள் படும் இன்னல்களையும் மறந்து பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவது எமது மண்ணின் மதிப்புக் கெடுவதுடன், மக்கள் மத்தியில் வர்த்தகர் சமூகம் கீழான நிலையில் கணிப்பிடப்படும் நிலையும் உருவாகும் எனவும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செ)

## மாவைக் கந்தன் தைப்பூசத் திருநாள்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் வருடாந்த தைப் பூசத் திருநாள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 3.00 மணிவரை நடைபெறவுள்ளது.

அன்றையதினம்ஸ்னபனாபிஷேகம் பூசை ஆராதனைகள் என்பன இடம்பெற்று ஷண்முகப் பெருமான் மஞ்சவூர்தியில் பவனி வருவார்.

இத்தைப்பூசத் திருநாளில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீண்டும் தத்தமது சொந்த இடங்களில் குடியமரவும், நாட்டில் அமைதி நிலவவும் பிரார்த்தனை செய்யப் படும்.

இப்பிரார்த்தனையின் முடிவில் மகேஷ்வர பூசையும் இடம்பெறும்.

அன்றையதினம் பக்தர்கள் மாவிட்டபுரம் செல்வதற்கு வசதியாக தெல்லிப்பழைச் சோதனைச் சாவடியிலிருந்து வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் நிறுவனமும் மகளிர் அபிவிருத்திநிலையமும்இணைந்து கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கட்டுரைப் போட்டிக்கு

★ பெண்கள்மீது வன்முறைகள் ஏற்படுத்தும் தாக்கம்.

★ எமது பிரதேசத்தில் பெண்கள் மீதான அடக்குமுறைகள்.

★ குடும்பத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

★ எமது பிரதேசத்தில் திருமணம் இருபாலாரதும் எதிர்பார்ப்புக்களை திருப்திப் படுத்துகின்றதா?

★ எமது பிரதேசத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொல்லைகள்

★ எமது பிரதேசத்தில் குடும்பவாழ்வு மேன்மையுற இருபாலாரதும் பங்களிப்புக்கள்

ஆகிய தலைப்புக்களில் ஏதாவதொன்றில் ஆக்கங்கள் 250 தொடக்கம் 350 வரையிலான சொற்களுக்கு உட்பட்டதாக இருப்பதுடன் அவை தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட வேண்டும்.

15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப் பட்டும், பல்கலைக்கழக மாணவர் நேரிலும் தமது ஆக்கங்களை பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம், 19, அரசடி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (செ-5)

## இறால் வலைகள் அறுக்கப்படுவதனால் தொழிலாளிகள் கவலை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பாஷையூர் கடற்கரையை அண்டி றால் பிடி தொழிலில் ஈடுபடுவோரின் வலைகள் அறுக்கப் படுவதோடு அவர்களது கூட்டுக்குள் உள்ள றால்களும் அபகரிக்கப்படுவதாக றால் தொழிலில் ஈடுபடும் தொழிலாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முன்பும் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் இடம் பெறுவதுபற்றி படையினருக்கு முறையீடு செய்யப் பட்டதால் குறைந்திருந்ததாகவும்,

ஆனால் தற்போது மீண்டும் இந் நாசகார வேலைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-59)

## கண்காட்சி

(கோப்பாய்)

கோப்பாய்க்கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ-79)

## மீன்பிடி கருவிகளை மீட்டுத்தருமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் யுத்த நடவடிக்கைகள் காரணமாகதாம் கைவிட்டு வந்த கடற்தொழில் உபகரணங்களை படைத்தரப்பினருடன் பேச்சு நடத்திமீட்டு எடுத்துதருமாறு நாகர்கோவில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனிடமும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(செ-5-43)

## செய்தித் துளிகள்

### திருடன் அகப்பட்டான்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் கந்த புராணவீதியில் அமைந்துள்ள வீடொன்றில், நேற்று முன் தினம் நண்பகல்வேளை ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கி, திருட்டு முயற்சியில் ஈடுபட்ட நபரொருவர், அப்பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வீட்டி லிருந்தவர்கள் வேலைக்குச் சென்றசமயம் சாதுரியமாக ஓடுபிரித்து உள்ளே நுழைந்த திருடன், பொருட்களை எடுக்கும் போது ஏற்பட்ட சத்தத்தினால் அயலவர்கள் உசாரடைந்தனர்.

இதனையடுத்து வீட்டுக்குள் திருடன் இருப்பதை ஊகித்த அயலவர் அருகில் உள்ள படையினரின் உதவியுடன், வீட்டுக்குள் புகுந்து சோதனையிட்டனர். அங்கு திருடனைக் காணாத படையினர் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்று விட்டனர்.

இதனால் சந்தேகம் கொண்ட இளைஞர்கள் மீண்டும் வீட்டுக்குள் புகுந்து தேடியபோது, வீட்டு லெவல் சீற்றுக்குள் ஒழிந்திருந்த திருடன் வசமாக மாட்டிக் கொண்டான். (இ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்தைச்சேர்ந்த சகல ஆசிரிய ஆலோசகர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.00 மணிக்கு யாழ் வலயக் கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (செ-5-19)

### ஆசிரியர்களுக்கு அவைக்காற்று நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தரத்தில் சித்தி அடைந்தவர்களுக்கான அவைக்காற்று நிகழ்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை மு.ப 10.00 மணிக்கு சங்கீத சபைத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளதாக வட ... கச் சங்கீதசபையின் நிர்வாகச் செயலாளர் மு. அருள் ஐயா அறிவித்துள்ளார். (செ-19)

### பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் செல்வ நாக பூஷணி அம்மன்ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகமும்அத்திவாரக்கல் நாட்டலும் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 6.50-7.42 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

### பெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தைச் சொந்தஇடத்தில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு விரும்பும் பெற்றோர்கள் தமது பெயர்களை பெப்ரவரி 5-ஆம் திகதிக்கு முன்னர், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அல்லது உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இயங்கும் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயஅதிபர் மு. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (செ)

### கலந்துரையாடல்

(இணுவில்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்படும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள்எதிர்வரும் சித்திரை மாதத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான விரிவுரை வகுப்புக்கள் சனி ஞாயிறு தினங்களில் வண்ணைநாவலர் மகாவித்தியாலயத்தில் 9மணி முதல் ஒரு மணிவரைநடைபெற்றுவருகின்றது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் கலந்துரையாடலில்பங்குபற்றுமாறு செயலாளர் செ. கந்த சத்தியதாஸன் கேட்டுள்ளார். (செ-5-49)

### தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலய தைப்பூசத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ,வாழ்க்கையில் விரதங்கள், என்னும் தலைப்பில் ஆசிரியர்காரை எஸ். ஆதவன் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

### கடனுதவு சங்கம் உதயம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கில் மனோன் மணி அம்பாள் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு கடனுதவு கூட்டுறவுச் சங்கம் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கல்வி உத்தியோகத்தர் திருமதி ச. பரமானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக செ. இளமுருகன், செயலாளராக உ. கமலகுமாரி, பொருளாளராக திருமதி நா. இரத்தினமலர் ஆகியோர் உட்பட 7 பேர் கொண்ட நிருவாகசபை தெரிவுசெய்யப்பட்டது. (எ-75)

### ஆசிரியர்களுக்கு பயிலமர்வு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்தில் தரம் 4 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாகல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிலமர்வில் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (செ-79)

### விபத்தில் காயம்

(வட்டுக்கோட்டை)

வீதியைக் கடக்க முயன்ற சமயம் அவ்வீதியால் வந்து கொண்டிருந்த சிற்றூர்தி மோதியதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம்சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகில் இடம் பெற்றது.

யாழ். நகர் நோக்கி வந்து கொண்டிருந்த மேற்படி சிற்றூர்தியில் அவ்யுவதி உணவுப் பொதியைக் கொடுத்துவிட்டு, வீதியைக் கடக்க முயன்ற போதே இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (செ-216)

# 5000 மெற். தொன் பொருட்களுடன் வாதுவ கப்பல் 28இல் வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டின் உணவுத் தேவையைப்பூர்த்தி செய்வதற்கு சுமார் 5000மெற்றிக் தொன் பொருட்கள் வாதுவ கப்பலில் இம்மாதம் 28ம் திகதி எடுத்துவரப்படவுள்ளது.

இக்கப்பலில் எடுத்துவரப்படும் ஐயாயிரம் மெற்றிக் தொன் பொருட்களில் உணவு மற்றும் மோட்டார்சைக்கிள் என்பன அடங்கும்.

இதுஇவ்வாறுஇருக்க பதுணவெலி என்னும் மற்றொரு புதிய சரக்குக்கப்பலும் அடுத்தவாரஇறுதியில் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இந்தியாவில் இருந்து சீமெந்து, சீனி, மிளகாய் உட்பட மற்றும்பல பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் இவற்றை நேரடியாகக் காங்கேசன்துறை முகத்திற்கு எடுத்துவருவதற்கும் எற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது

பருத்தித்துறை இறங்குதுறையில் போதியபாஜ் இல்லாமையால் பொருட்கள் இறக்கும்பணி தாமதமடைவதால் மேலும் பாஜ்அனுப்பிவைக்குமாறு கப்பல்கம்பனி உரிமையாளர்களுக்கு ஜயலத் ஜெயவர்த்தனா பணிப்புரை வழங்கியுள்ளார். (வ)

## மகனை மீட்டுத் தருமாறு தந்தை உண்ணா விரதம்

(வவுனியா)

காணாமல்போன தனது மகனை மீட்டுத் தரும்படி தந்தையார் ஒருவர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ப.சந்திர ஸ்ரீநிவாஸ் கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி காணாமல் போனார்.

அதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட போதும் எவ்வித பலனும் கிடைக்காத நிலையில் விரக்தியடைந்த தந்தை வி.பரமசாமி(வயது-71)உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இவர் உண்ணாவிரதம் இருக்க போவதுதொடர்பாக வவுனியா மாவட்டநீதிவான் சர்வதேச செஞ்சிலுவை சங்கக்குழு ஆகியோருக்கும் அறிவித்துள்ளார். (செ-8)

## கண்டி- உடவளவை முஸ்லிம் கொலையுடன் தொடர்பான படையினர் சரணடைவு

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி நடந்து முடிந்த பொதுத் தேர்தல்தினத்தன்று கண்டி உடவளவை பிரதேசத்தில் பத்து முஸ்லிம்களின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் பத்து இராணுவத்தினர் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இராணுவ அதிகாரிகளின் துணையுடன் இவர்கள் பொலிஸில் சரண் அடைந்துள்ளனர்.

எனினும் இக் கொலை முக்கிய சந்தேக நபர்களாக கருதப்படும் அனுருத்தரத்வத்தையின் இரு புதல்வர்களையும் கைது செய்யும் முகமாக பொலிஸ் புலனாய்வுத் துறையினர் புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதுடன், அவ்விடயம்தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சரைதீவிர விசாரணை செய்ததாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குணசிறி உடுகம் பொல தெரிவித்துள்ளார். (செ-8)

## இராசி பலன்

24.1.2002
(தை 11, வியாழன்)
தசமி மு.ப 10.26 வரை
கார்த்திகை மு.ப10.19வரை
ராகுகாலம்-2.06-03.36
சுபநேரம் 8.06-9.36

**மேடம்**
விதண்டாவாதம் தொழில் முயற்சி, மரியாதைக்குறைவு, காரியதாமதம்.

**இடபம்**
அதிகயோசனை, வாக்குப் பலிதம்,புதியமாற்றம்முயற்சி தாமதம்.

**மிதுனம்**
காரியஅலைச்சல், உடல் வியாதி, பெரியோர் வெறுப்பு, சயனசுகக்குறைவு.

**கடகம்**
தொழில்லாபம்,தெய்வஅனுகூலம்,காரிய நன்மை,கீர்த்தி.

**சிங்கம்**
அதிகாரம், கடினமுயற்சி, நல்ல செய்தி, காரியம் கைகூடும்.

**கன்னி**
பயணம், மனப்பயம், கட்டுப்பாடு,முயற்சி தாமதம்.

**துலாம்**
பிரயாணபயம், வீண் தொல்லை,நல்லஉறவுகிடைத்தல்,முயற்சி தடங்கல்.

**விருச்சிகம்**
காரிய அனுகூலம், தனலாபம்,அதிகாரம், சகோதரர் உதவி.

**தனுசு**
இலட்சுமிகரம், தொழில் விருத்தி,காரிய அனுகூலம், சுகவாழ்வு.

**மகரம்**
மனக்குழப்பம், வியாதி, காரிய தாமதம், வியாபார சிறப்பு.

**கும்பம்**
விரோதம்,மாணவர் கல்விச்சிறப்பு,ரோகபயம்,காரிய தாமதம்.

**மீனம்**
காரிய அனுகூலம், அன்னியர் சந்திப்பு,தனவரவு, நல்ல முயற்சி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**


## ஒன்றிப்பு வழிபாடு

காலம்:- நாளை (25 - 01 - 2002) வெள்ளிக் கிழமை பி.ப 4.00 (S . L . T)

இடம்:- பீற்றோ மண்டபம், சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மன்றாட்டுத் தலைப்புக்கள்

- தூய ஆவி வேண்டி பிரார்த்தனை.
- பிழையுணரப் பிரார்த்தனை.
- பிதாவின் தன்மை எம்மில் உருவாகப் பிரார்த்தனை.
- குமாரனின் தன்மை எம்மில் உருவாகப் பிரார்த்தனை.
- தூயஆவியின் தன்மை எம்மில் உருவாகப் பிரார்த்தனை.
- தைரியத்துடன் பணிபுரிய புறப்பட்டுச் செல்லப் பிரார்த்தனை.

செய்தி வழங்குபவர்கள்
Rt. Rev. Dr. Thomas Sountharanayagam.
Rt. Rev. Dr. S. Jebanesan.

அருளுரை
Rev. Fr. Thomas C. Kuriacose, S. J

அனைவரும் அன்பாக அழைக்கப்படுகின்றீர்கள்.
நீங்களே உலகத்திற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்: (மத் 5:14)
என்ற இயேசுவின் கூற்றுக்கு உண்மையாயிருக்க வேண்டியதன் அடையாளமாக ஒளியேற்ற ஆளுக்கொரு மெழுகுதிரி கொண்டு வாருங்கள்.

RESPONDING TO CHURCH UNITY
"That they may be one as we are one"

ஒன்றிப்பிற்கான ஆணைக்குழு, கத்தோலிக்க மறைமாவட்டம். யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்

(4288)

# செய்தித் துளிகள்

## அனுருத்தவின் சகா மீது விசாரணை

(கொழும்பு)

தேர்தல் தினத்தன்று பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்தவின் நெருங்கிய சகாவான பிரிகேடியர் ஒருவர் நேற்றுமுன்தினம் எட்டுமணிநேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (வ)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வடகிழக்கு விவசாயிகள் சம்மேளன வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமைபி.ப. 10.00மணிக்கு சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில், சம்மேளனத் தலைவர் இ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

## கடன் வழங்கல்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைகால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தனதுஅங்கத்தவர்களுக்கு நுண்கரு செயல்திட்டத்தின் கீழ்வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் மூலம்கடன்களைப் பெற்று வழங்கவுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச பதில்செயலராகக்கடமையாற்றும் வேலணை பிரதேச செயலர்செ.இரட்ணம்இதுதொடர்பான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதாக வட்டுக்கோட்டை அரச கால் நடைவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (செ-5-216)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய ஆசிரிய நிலைய முகாமையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2002.01.01இல்40வயதிற்குட்பட்டவராகவும்அங்கீகரிக்கப்பட்டபல்கலைகழகமொன்றில் பட்டதாரியகவும், பட்டப்பின் டிப்புளோமாபயிற்சி பெற்றவராகவும், பட்டதாரியாக 5வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலமுடையவராகவும் இருத்தல் வேண்டும் விண்ணப்பங்களைஎதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவேண்டும். (செ- 7)

## எல்லே போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் குழுப்போட்டிகளில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவறறுறை புனித அந்தோனியார்கல்லூரியில்எல்லே போட்டிகள் இடம் பெறவுள்ளன. (செ-75)

## அலுவலகத்தில் துர்நாற்றம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் தெற்கு உப அலுவலகத்திற்குச் செல்லும் பொதுமக்கள் சுகாதாரச்சீர்கேட்டினால் அவஸ்தைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அலுவலகத்தில்குடிகொண்டுள்ளவெளவால்களின் எச்சங்களால் படுமோசமான துர்நாற்றம் வீசுவதாகவும் அங்கு பத்திரிகை வாசிக்கச் செல்வோர் மூக்கைப்பொத்திக் கொண்டிருந்தவாறே வாசிக்கக் வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில்உள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-238

## வலைப்பந்து போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்பிரிவில்பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் குழுப்போட்டிகளில் எதிர்வரும் திங்கட்கிழமை, ஊர்காவற்றுறைபுனிதமரியாள்மகளிர்வித்தியாலயத்தில் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன. (செ-75)

## நெல் அறுவடை ஆரம்பம்

(கல்வயல்)

வடமராட்சி வல்லைப்பகுதியில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

இம்முறை இப் பகுதிகளில் நெல் விளைச்சல் அதிகமாக உள்ளதனால் புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளிலிருந்தும் அறுவடைகளை மேற்கொள்வதற்காக பெண்கள் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. (செ-111)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகவிளையாட்டு அணித்தலைவர், உபதலைவர் ஆகியோருக்கான கூட்டம் பெப்ரவரி மாதம் 12 ஆம்திகதி பி.ப.4.30 மணிக்கு உடற்கல்வி அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

பல்கலைக்கழகவிளையாட்டு அணித்தலைவர், உபதலைவர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அதன் விபரங்களை உடற்கல்வி அலுவலகத்தில் பார்வையிட முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5-19)

## ஆட்டிறைச்சியால் வயிற்றோட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்மத்திய பகுதியில் ஆட்டிறைச்சியை உண்டசிலர் வயிற்றோட்டத்துக் குட்பட்ட சம்பவம் அண்மையில் நடைபெற்றது

குறைமாதக்குட்டியையீன்ற மறி ஆடொன்றின் இறைச்சியை கடாவின் இறைச்சி எனக் கூறிசிலவிஷமிகள் பங்கு போட்டதாகவும் இதையுண்டவர்களே இக்கதிக்கு ஆளானதாகவும் தெரியவருகிறது. (செ-7)

## சான்றிதழ் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தவருடம்வடஇலங்கை சங்கீத சபையால் நடத்தப்பட்ட பொதுப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கானசான்றிதழ்கள்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கீதசபை அதிகாரி அறிவித்துள்ளார். (செ-5-19)

## நாய்கள் திருடி விற்பனை

(கல்வயல்)

வண்ணார் பண்ணை, ஓட்டுமடம், ஐந்துசந்திப் பகுதியில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களைத் திருடும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன வீட்டுக் காரர் வெளியே சென்றவுடன் உள் நுழையும் நாய்த் திருடர் ஆண் நாய்களைத் திருடிச் சென்று அதிக விலைக்கு விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. (செ-111)

# யுத்த நிறுத்தம் மேற்கொள்கையில் படையினரின் தொழில் தடைகள் ஏன்

## யாழ். மாநகர சபை உறுப்பினர் அறிக்கை

(கொழும்பு)

கைதிகளாக உள்ள படையினரைப் பார்ப்பதற்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு படையினரின் உறவினர்களும், சிங்கள அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சென்று வருகின்றனர். புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து நல்லெண்ணத்துடன் செயற்பட்டுவரும் இக்காலத்தில் படையினர் மாத்திரம் தொழில் தடைகளைத் தளர்த்தாது தமிழ்மக்களைக் கஷ்டத்திற்குள்ளாக்குவது எதற்கு?

இவ்வாறு மணிபுரி உதயபுர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின்செயலாளரும், யாழ்.மாநகரசபையின் உறுப்பினருமான (புளொட்) எஸ். ஜெயச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் வினவியுள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா வட பகுதிக்கு அண்மையில் வருகை தந்திருந்தபோது ஹாட்லி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசுகையில் யாழ். குடாநாட்டில் மீனவர்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கிய மீன்பிடித் தடை நீக்கப்படும் என்று உறுதியளித்தார். ஆனால் இதுவரை அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இனப்பிரச்சினை ஆரம்பமான காலந்தொடக்கம் இன்றுவரை கடற்றொழிலாளர்களே தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறார்கள் யுத்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட மீன்பிடித் தடையினை யுத்த நிறுத்தம் செய்யப்பட்ட இக்காலத்தில் நீக்குவது தவறான விடயமல்ல.

மீன்பிடிப்பதற்கு வழங்கப்பட்டிருக்கும் தூரம், நேரம் என்பவற்றை யாவது அதிகரித்து அனைவருக்கும் எத்தகைய காரணங்களையும் முதன்மைப்படுத்தாது அனுமதி அட்டையினை வழங்க வேண்டும் என்று மேலும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை மு.ப 11 மணிக்கு மாணவர்களுக்கான பொது அறையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-5-19)


### நல்லூர் பிரதேச சபை

# மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திர விநியோகம் :- 29. 01.2002 நணபகல் 12.00 மணிவரை.
கேள்வி ஏற்கப்படும் திகதி :- 31. 01.2002 முற்பகல் 10.00 மணிவரை.
கேள்விப்பத்திரம்திறக்கப்படும்திகதி:- 31.01.2002 பிற்பகல்2·00 மணிவரை.
ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

**அறிவித்தல் I**

| இறைச்சிக்கடைகள், கடைகள். | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்தநாள் வாடகைத் தொகை. (ஜி.எஸ்.ரி.தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 1. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350-00 | 3000-00 | 500-00 |
| 2. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை. | 350-00 | 3000-00 | 100-00 |

குறிப்பு :- 1. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடைவாரத்தில் ஐந்து நாட்கள் நடாத்தப்படல் வேண்டும்.
கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை வாரத்தில் மூன்று நாட்கள நடாத்தப்படல் வேண்டும்.
2. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்றுமாதத்திற்கான கேள்வித்தொகையை உடன் செலுத்துதல் வேண்டும்.

**அறிவித்தல் II**

| | | | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆககுறைந்த தொகை (ஜீ. எஸ்.ரி.தவிர்ந்தது) |
|---|---|---|---|
| ஆடியபாதம் வீதி, கடை இல: 38 | 500-00 | 10000-00 | 324000-00 |
| நவீன சந்தை மேல்மாடிக்கடை- இல 01. | 500-00 | 10000-00 | 210000-00 |
| இல 02. | 500-00 | 10000-00 | 210000-00 |
| இல 03. | 500-00 | 10000-00 | 144000-00 |
| இல 04' | 500-00 | 10000-00 | 144000-00 |
| இல 06. | 500-00 | 10000-00 | 144000-00 |
| இல 07. | 500-00 | 10000-00 | 210000-00 |
| இல 08. | 500-00 | 10000-00 | 210000-00 |
| இல 09. | 500-00 | 10000-00 | 192000-00 |
| இல 10. | 500-00 | 10000-00 | 192000-00 |
| இல 12. | 500-00 | 10000'00 | 168000-00 |
| இல 13. | 500-00 | 10000-00 | 168000-00 |
| இல 14. | 500-00 | 10000-00 | 168000-00 |
| இல 16. | 500-00 | 10000-00 | 288000-00 |

க. மணிபல்லவராஜன்,
(ஜே·பி.யு·எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
22.01.2002.

(சி-3326)

## இன்று ஒரு தகவல்

### சிறிதளவே மகிழ்ச்சி

செழியனும், வளவனும் நண்பர்கள். பொருள் தேடுவதற்காகப் பக்கத்து நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார்கள். 'நண்பா பொருள் ஈட்டுவது மிகவும் கடினம். நம்மிடம் நூறுபணம் சேரும் வரையில் சுவையான உணவே உண்ணக்கூடாது. பழைய சோறும் கஞ்சியும்தான் சாப்பிட வேண்டும்'' என்றான் செழியன். வளவனும் இதற்கு ஒப்புக்கொண்டான். இருவரும் வேலைதேடி வெவ்வேறு ஊருக்குப் பிரிந்து சென்றனர்.

செழியனுக்கு வேலையொன்று கிடைத்தது. கூலிமிகக்குறைவு இருந்தாலும் சொன்ன சொல்மாறாமல் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பணம் சேர்க்கத் தொடங்கினான். அவன் உழைப்பைக் கண்டு மகிழ்ந்த முதலாளி மேலும் நல்ல வேலை தந்தார். சில மாதங்களுக்குள் அவனிடம் நூறுபணம் சேர்ந்தது. அதைக்கொண்டு சொந்தத் தொழில் தொடங்கினான். அதன் பிறகுதான் சுவையானஉணவை உண்ணத் தொடங்கினான்.

வளவனுக்குத் தொடக்கத்திலேயே நல்லவேலை கிடைத்தது. நான்கு நாட்களுக்குள் சிறிது பணம் சேர்ந்தவுடன் அவனால் நாவை அடக்க முடியவில்லை. இந்த ஒருமுறை மட்டும் சுவையான உணவு சாப்பிடுவோம் அதன்பிறகு நண்பனிடம் சொன்னபடி கட்டுப்பாட்டோடு இருப்போம் என்று நினைத்து எல்லாப் பணத்திற்கும் வயிறு முட்டச் சாப்பிட்டு முடித்தான். பணம் சேரும் போதெல்லாம் இப்படியே செய்து கொண்டிருந்தான். அதனால் எப்பொழுதும் வறுமையிலேயே இருந்தான் அவன். தன் நிலையில் சிறிதும் முன்னேற்றம் இல்லை என்று கவலைப்பட்டான் அவன்.

செழியன் எப்படிஇருக்கிறான் என்பதை அறிவதற்காக அவனைத் தேடிப்புறப்பட்டான். அந்த ஊரிலேயே செல்வர்களுள் ஒருவனாகச் செழியன் இருப்பதை அறிந்தான். நண்பனை வரவேற்ற செழியன் அவன் வாயிலாக நடந்ததை எல்லாம் அறிந்தான். நம் ஒப்பந்தத்தை மீறி நடந்தாய், இப்பொழுதும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. இங்கேயே நீ வேலைபார்க்கலாம் தோட்டத்தில் உள்ள குடிசையில் நீ தங்கியிருக்கலாம் உன்னிடம் நூறு பணம் சேரும் வரை சுவையான உணவு உண்ணக்கூடாது. நாள்தோறும் கஞ்சிதான் சமைத்துச் சாப்பிடவேண்டும்'' என்றான் செழியன்,

''நண்பாநீசொன்னபடியே நடக்கிறேன், உன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள அந்தப் புளியமரத்தின் இலைகளை மட்டும் சுவைக்காக உணவில் சேர்த்துக் கொள்கிறேன்'' என்றான் வளவன். இதற்குச் செழியனும் ஒப்புக்கொண்டான், நாள்தோறும் சமைக்கும் உணவில் அந்தப் புளியம் இலைகளைச் சுவைக்காகச் சேர்த்துக் கொதிக்க வைத்தான்.பிறகு அதைஉண்டுவந்தான் அவன். ஒருமாதத்தில் அந்தப் புளிய மரத்தில் ஒரு இலை கூடஇல்லை. செழியனிடம் வந்த வளவன் ''பக்கத்துப் புளியமரத்திலும் இலைகளைப்பறிக்க அனுமதிக்க வேண்டும்' இந்தமரத்தில் இலைகளே இல்லை'' என்றான்.

மொட்டையாக நின்ற புளியமரத்தைக் கண்ட செழியன் ''இந்தப் புளியமரம் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில்தான் நீயும் உள்ளாய்'' நானாக இருந்தால் என்ன செய்திருப்பேன். ஒரு கிளையில் சில இலைகளை மட்டும் பறித்திருப்பேன். அடுத்தநாள் இன்னொரு கிளையில் சிறிது இலைகள் பறித்திருப்பேன். என்தேவையைக் குறைத்து எனக்கு எப்பொழுதும் இலைகள் கிடைக்குமாறு பாதுகாத்துக் கொண்டிருப்பேன். இந்தமரமும் வற்றாத சுரங்கம்போல் எப்பொழுதும் எனக்கு இலைகளைத் தந்திருக்கும், நான் சுவையான உணவுகளைச் சிறிதுகாலம் சாப்பிடாமல், இன்பத்திற்குத் தாமதமாக இருந்ததால் நல்ல நிலைமையடைந்தேன். இதுவேஉனக்கு ஒருபாடமாக அமையட்டும் என்றான்.

உண்மைநிலையைஉணர்ந்த வளவன் அன்று முதல் இன்பத்திற்கு இடம் தராமல் உழைக்கத் தொடங்கினான். சில நாட்களுக்குள்ளே அவனிடம் நூறுபணம் சேர்ந்தது, அதன்பிறகு இரண்டு நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்தனர். சில ஆண்டுகளுக்குள் வளவனும் செழியனைப்போல் வளமானவன் ஆனான்.

பேராசிரியர் எ. சோதி.

## ஏமாற்றப்பட்ட குடாநாட்டு மீனவர்கள் உணர்ச்சிவேகம் கொள்ளுமிடத்து மறியல் போராட்டம் மாற்றுருபமடையும்

### பத்திரிகையாளர் சந்திப்பில் மனக்கொதிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் முடிந்து புதிய அரசு பதவி ஏற்றாலும் இதுவரை மீனவசமூக மக்களுக்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை திட்டமிட்டு மீனவர் சமுதாயத்தை அடக்கி ஆளுகின்ற நிலைமையையே அரசுகளும் இங்குள்ள அதிகாரிகளும் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் நிவாரணங்களை நம்பியிருக்கவில்லை ஒவ்வொரு கடல் தொழிலாளியும் சுதந்திரமாகத்தொழில் செய்வதற்குரிய அனுமதியை பெறுவதற்காகவே நாம் காத்திருக்கின்றோம்.

இது அவர்களின் வாழ்வாதாரத்தோடு தொடர்புடைய பிரச்சினை அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்பல தடவைகள் இதுகுறித்து தெரியப்படுத்தியும் அவர்கள் செவிசாய்க்கவில்லைஇந்தநிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். செயலகம் முன்பாக தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர எமக்கு வேறுவழிகள் தெரியவில்லை அதனால் ஏற்படும் சகல பாதிப்புக்களுக்கும் அரசே முழுப் பொறுப்பும் ஏற்றாக வேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்றபத்திரிகையாளர் சந்திப்பில் வடமாகாண கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத்தலைவர் சி. தவரட்ணம் எச்சரிக்கை விடுத்தார் .

யாழ். பிரதானவீதியிலுள்ள வடமாகாண கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் மயிலிட்டி கடல் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க செயலாளர் ந. இரட்ணராஜா வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் சமாசத் தலைவர் க. சூரியகுமார், சங்க உறுப்பினர் எஸ். மகேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு, வடமராட்சி வடக்கில் திக்கம் தொடக்கம் தொண்டைமானாறு வரையான பிரதேசம் தொழில் செய்வதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.இதனால் சுமார் ஆயிரத்து 500குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை வலிவடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் தங்கியுள்ள ஆயிரம் குடும்பங்கள் மற்றும் வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்தசுமார்600குடும்பங்கள் வரையில் தொழிலின்றி வறுமையில் வாடுகின்றன.

1983இல் ஆயிரத்து250 ரூபா நிவாரணம் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்தாலும் வாழ்க்கைச் செலவு உச்சத்தை அடைந்துள்ள இக்காலத்தில் இது தொடர்பாக இங்குள்ள அரச அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்தவும் இல்லை. இது எமது சமூகத்தை முன்னேற விடாது தடுக்கும் கபடத்திட்டமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தொழில் வாய்ப்பின்மையால் பிள்ளைகளின் கல்வி மோசமாகப் பாதிக்கப்படுகிறதுகரையோரப்பாடசாலைகளும் வேண்டுமென்றே கல்வி அதிகாரிகளினால் புறக்கணிக்கப்படுகின்றன. மின்சாரவிநியோகத்திலும் பாகுபாடுகாட்டப்படுகிறது.

சாதி,பிரதேச வேறுபாடு கருதியே எமதுமக்கள அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள் இதனால்எமதுமக்கள் விரக்தியின்விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களின் உணர்ச்சிவேகம் கொள்ளும் போது மறியல்போராட்டம் எந்தவிதமான நிலைக்கும் இட்டுச்செல்லும் என்பதை யாரும் ஊகித்துக் கொள்ளலாம்.

அரசியல் மாற்றமொன்று தேவை என்றுநம்பி வாக்களித்த மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் இனிவரும்உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள இவர்களுக்கு தகுந்தபாடம் புகட்ட திடசங்கற்பம்பூண்டுள்ளனர்.

தைப்பொங்கல்திருநாளைக் கொண்டாடக்கூட எமது இல்லங்களில் ஒருபிடி அரிசி இருக்கவில்லை இந்தநிலையில் எமதுமக்கள் படும்அவலங்களுக்கு புனர்வாழ்வு அகதிகள அமைச்சர் டாக்டர்ஜயலத் ஜயவர்த்தனா கூடஎந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை வெறும் உறுதி மொழியோடு செனறு விட்டார்.இதுவரைஎந்தப்பதிலும் இல்லை.

இன்று சாதாரண சுமுகமான சூழல்நிலவுகின்றபோது மீனவர்களுக்கு மட்டும் ஏன் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. கரையோரப் பகுதிகள் ஒதுக்கப்படுவதற்கு அதிகாரிகளின் போக்கே காரணம் என்பதை மீண்டும் அப்பட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதேவேளை செல்வச் செழிப்போடு இருந்த வல்வெட்டித்துறை மக்கள்படும் அவலம் சொல்லமுடியாதது

நாம் எவருக்கு மகஜர் கொடுத்தும் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை ல30ம்திகதி செயலகம் முன்பாக நடைபெறவிருக்கும் மறியல்போராட்டம் யாழ்மாவட்ட ரீதியாக விஸ்தரிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

இதற்குவடமராட்சி தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவும் கிடைத்துள்ளது. உரிமைகளுக்காகப் போராடுகின்ற அதே நேரம் சமூகப் பிரிவுகள் ரீதியாகப் போராடி தத்தமதுஉரிமைகளை நிலைநிறுத்துவதற்கு எமதுஇனம் தள்ளப்பட்டுள்ளமை வேதனைக்குரியது என்று அங்குகருத்துதெரிவிக்கப்பட்டது. (உ-106)

### விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1996 ஆம் ஆண்டு காணாமற்போன பாடசாலை வீதி, நாவற்குழியைச்சேர்ந்த இமானுவேல் ஜெயசீலன் என்பவரது விசாரணை தொடர்பாக பலாலி வீதி கோண்டாவிலைச் சேர்ந்த கோபாலசிங்கம், பூபாலசிங்கம் என்பவரை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு விசேட புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (உ-10)

### இலக்க தகடில்லா வாகனம் மீட்பு

(கண்டி)

பொதுஜனஐக்கியமுன்னணி ஆட்சியில் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்பட்ட பேருந்து ஒன்று கண்டி முடுத்தலாவ பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொ. ஐ.முன்னணிஅரசின் முன்னாள அமைச்சர் ஒருவருக்கு இந்த பேருந்தும் சாரதியும் வழங்கப்பட்டு இருந்தது.

ஆட்சி மாற்றத்தை அடுத்து வாகனங்களை திருப்பி ஒப்படைக்குமாறுசகலஅமைச்சர்களுக்கும் பணிப்புரை விடுக்கபட்டபோதும் தற்போது இவ்வாகனம் இலக்கத்தகடுகள் எதுவும் அற்றநிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-8)

### மட்டக்களப்பு தாக்குதலுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மட்டக்களப்பு நகரப் பகுதியில் அமைந்திருந்த மனித வலு முகவர் அமைப்பு அலுவலகத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கநிறுனவமான மனிதவலு முகவர் நிலையத்தில் தங்கியிருந்தவர்கள் பயன்படுத்திய பாவனைப் பொருட்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பதுடன் பலர் காயமடையும் நிலை இந்த மோசமான தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ளது

ஈ. பி. டி. பி. யினர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், மோதல் தவிர்ப்பு, மற்றும் போர் நிறுத்தம் என்பன கடைப்பிடிக்கப்படும் இன்றைய சூழலில் இத்தகைய தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதைப் பொலிஸார் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது.

ஆதலால் இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### திருடன் பொலிஸில் ஒப்படைப்பு

(வட்டுக்கோட்டை)

அராலி தெற்குமாதா கோவிலுக்குச் சென்றதம்பதியரின் சைக்கிளைத் திருடிச் சென்றவன் அவ்வூர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

பின்னர் இத்திருடன் கிராம சேவகர் ஊடாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான். (செ-216)

## புலி என நடித்தவர் புலிகளிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

புலிகள் எனக் கூறிக் கொண்டு முஸ்லிம் வர்த்தகர்களிடம் பணம் பறிக்கும் மோசடிகளில் ஈடுபட்ட இரண்டு ஆசாமிகள் வகையாக விடுதலைப்புலிகளிடம் மாட்டிக் கொண்டனர்.

இம் மோசடிச் சம்பவம் அண்மையில் ஓட்டமாவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வர்த்தகர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட இம் மோசடிப் பேர்வழிகள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## புலிகளின் தடை நீக்கினால் நாடு அழிந்து போகும் ஜே.வி.பி எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீக்குவாரேயானால் இலங்கை நாடு அழிந்துபோகும். இவ்வாறு ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

ஜே.வி.பி.யின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பேசிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

1998 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்கினால் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டி ஜே.வி.பி. போராட்டம் நடத்தும் என்றும் எச்சரித்தார். (வ)

## சிந்தனைக்கு விருந்து

### என் வாழ்வு பாழானது

புசிப்புக் கெனச்சுவையாய்ப் பொங்கிப் படைத்தும்
கசிப்படித்த சண்டாளன் காலால் - விசையாய்
உதைக்கிறான் பானை உடைக்கிறான் என்னை
வதைக்கிறான் என்வாழ்வு பாழ்.

'பழையவன்'

# நவீன ஜெற் விமானங்களை இந்தியா பிரிட்டனிடம் வாங்கும்

(லண்டன்)

இந்தியாவிற்கு நவீன ஜெற் விமானங்களை விற்பதற்கு பிரிட்டன் பேரம்பேசுகிறது.

அமெரிக்கா சென்றிருந்த இந்தியபாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் நாடுதிரும்புகையில் பிரிட்டனில் தங்கி அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தைகளைநடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் ஊடே இந்திய பாகிஸ்தான் எல்லை தொடர்பாகவும் இந்திய பாராளுமன்றம் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டது பற்றியும் ஆப்கான் நிலைமைபற்றியும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தப்பேச்சுகளில் பிரிட்டனிடமிருந்து 100 கோடிஸ்ரேலிங் பவுணுக்கு ஜெற் விமானங்கள் வாங்குவதுபற்றி இந்தியா முடிவெடுக்க இருப்பதாகவும் பிரிட்டனும் சம்மதித்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## கைதிகள் விடுவிப்பு

(தெஹிரான்)

ஈரான் 188 ஈராக் கைதிகளை விடுதலை செய்துள்ளது. 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிகள் தற்போது ஈராக்கை சென்றடைந்துள்ளதாக ஈராக்கில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-7)

## பலஸ்தீனக் கரைப்பகுதியில் பலஸ்தீனியர் ஐவர் இஸ்ரேலியரால் கொலை

(ஜெருசலேம்)

பலஸ்தீன மேற்குக் கரைப் பகுதியை இஸ்ரேலியர் சுற்றி வளைத்தபோது சந்தேகத்திற்கிடமான ஐந்து பலஸ்தீனப் படைகளை சுட்டுக்கொன்றுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஆனால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்துபேரும் பலஸ்தீன அப்பாவிப் பொதுமக்கள் என்று பலஸ்தீனத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளைஇஸ்ரேலியரின் படுகொலைகளை ஐக்கியநாடுகள் சபை செயலாளர்நாயகம் கோபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இஸ்ரேலியரால் கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளை விட்டு அவர்களை வெளியேறுமாறும் அவர் கேட்டுள்ளார். (செ-7)

# உலக தரிசனம்

## இஸ்ரேலில் 15பேர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் மேற்குகரை நகரின் மத்தியில் தானியங்கி துப்பாக்கி ஏந்திய நபரொருவர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

பேருந்து நிலையத்திற்கு அருகே நின்றிருந்த இந்த நபர் திடீரென பொதுமக்கள் மீதும் குறிவைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனநெரிசல் மிக்க நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாலேயே அனேகர் காயமடைந்ததாகவும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேலியப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-5)

## 'டொல்கானா' இஸ்ரேலின் பூரண கட்டுப்பாட்டினுள்

(ஜெருசலேம்)

காஸாவில் உள்ள பலஸ்தீனர்களின் ''டொல்கானா'' நகரை இஸ்ரேலியப் படைகள் தங்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

அண்மையில் உலங்குவானூர்திகள் டாங்கிகள் சகிதம் நகருக்குள் நுழைந்து 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பருக்குப் பின்னர் முதல் தடவையாக நகரைக் கைப்பற்றி ஊரடங்கு சட்டத்தையும் பிறப்பித்துள்ளனர்.

அத்துடன், நகரை பல பாகங்களாகப் பிரித்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலியர்கள் சந்தேகத்திற்கிடமானவர்களை கைதுசெய்துவருகின்றனர்.

இதேவேளை, இஸ்ரேலியப் படைகளின் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை கடுமையாக கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## விளையாட்டு செய்திகள்

## இங்கிலாந்து அணியிடம் இந்தியா மண் கவ்வியது

(சென்னை)

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஹற்றாக் மைதானத்தில் நடை பெற்ற இரண்டாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 16 ஓட்டங்களால் இந்தியாவைத் தோற்கடித்துள்ளது.

ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெற் இழப்புக்கு 250 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து234 ஓட்டங்களையே பெற்றது.

இதே வேளை கல்கத்தாவில் மேற்படி இருஅணிகளுக்குமிடையே நடை பெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி யீட்டியிருந்தது.

நேற்று முன்தினம் இரண்டாவது சர்வதேச ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றியீட்டியுள்ளது.

இந் நிலையில் இவ்விரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகள் என்ற நிலையில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அதிபர் அடித்ததனால் மாணவன் மரணமானான்

(புதுடில்லி)

புவியியல் பாடப்பரீட்சையில் வினாப்பத்திர தாள்களில் கேட்கப்பட்ட கேள்விக்கு பிழையான விடையை எழுதியதால் தலைமை ஆசிரியரின் தண்டனைக்கு உள்ளான மாணவன் ஒருவன் பரிதாபகரமாக மரணமானான்.

இச்சம்பவம் இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நௌபாசா என்னும் இடத்தில் நடைபெற்றுள்ளது.

தனியார் பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் கஜனேந்திரா (வயது 8) என்னும் இச்சிறுவனுக்கு, அதிபர் தலையில் கடுமையாகத் தாக்கியதனாலேயே இப்பரிதாப நிலை ஏற்பட்டது. (செ-8)

## பெண் சிசு கண்டெடுப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் 'பழனி' ரயில் நிலையப்பகுதியில் உள்ளமுட்புதரில்அநாதரவான நிலையில் கிடந்த பிறந்து, சில மணிநேரமானபெண்குழந்தை ஒன்றை ரயில் நிலைய பொலிஸ் அதிகாரிகள்காப்பாற்றியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த சில நாட்களுக்கு முன்னர் பழனி ரயில் நிலைய காவல் நிலையத்திற்கு அருகில் குழந்தை அழும் சத்தம்கேட்டதை தொடர்ந்து அதிகாரிகள் சென்று பார்த்த வேளை;

பிறந்த சில மணிநேரத்தில் பச்சிளம் பெண் சிசு ஒன்று உடலில் காயங்களுடனும் எறும்புகள் மொய்த்தும் காணப்பட்டது.

இக்குழந்தை சுமார் 6 மணி நேரம் கொட்டும் பனியில் கிடந்து துடித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றிய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-7)

## சச்சினுக்கு விளம்பரத்தால் 75 கோடி வருமானம்

(புதுடில்லி)

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கடந்த 5 வருட காலத்தில் 75 கோடி ரூபாவை விளம்பரம் மூலம் பெற்றுக் கொண்டார். இவரை ஒப்பந்தம் செய்த 'வேல்ட் ரெல்' நிறுவனம் அடுத்த 5 வருடங்களுக்கு ஒப்பந்தத்தைப் புதுபித்துள்ளது புதிய ஒப்பந்தப்படி 250 கோடி ரூபா சச்சினுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல விளம்பர நிறுவனங்கள் மூலம் வருடமொன்றிற்கு சராசரியாக 4 கோடி ரூபாவும் ஹோம்டி ரெட் நிறுவனம் மூலம் வருடம் ஒன்றிக்கு 13 கோடி ரூபாவும் சச்சினுக்குகிடைக்கின்றது. (செ-10)

## இந்திய-பாக். துருப்பினர் செவ்வாயன்று மோதல் பொது மக்கள் பலர் பலி

(புதுடில்லி)

இந்திய - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இரண்டு நாட்டுப் படைத்தரப்பினரும் திடீர்த்தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

எல்லைப்பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டும் பலநாட்கள் அமைதி நிலவிவந்த எல்லைப் பகுதியில் திடீரென தாக்குதல் மூண்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஆரம்பமான இத்தாக்குதலில் இதுவரை 21 பொது மக்கள் உயிரிழந்ததாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-7)

## அதிகூடிய டெஸ்ட் சதம் பெற்ற இருவரின் பெயர்கள் வரலாற்றில் பதிவு

(கொழும்பு)

125 வருட கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரைகாலமும் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களில்ஒரே வருடத்திற்குள் அதி கூடிய டெஸ்ட்சதங்களைப்பெற்றுள்ளவர்களான இருவரின் பெயர்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. அந்த இரண்டு சாதனை வீரர்களில் ஒருவர் இலங்கை அணியின் முன்னைநாள் உப தலைவர் அரவிந்தடி சில்வா மற்றையவர் மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ்.

ஒரே வருடத்திற்குள் ஏழு டெஸ்ட் சதங்களைப் பெற்று சாதனையை 1976 ஆம் ஆண்டில் விவியன் ரிச்சர்ட்ஸ் நிகழ்த்தினார் அதன் பின்பு இலங்கை கிரிக்கெட் அணியின் உபதலைவரான அரவிந்தடி சில்வா 1997ஆம் ஆண்டு ஏழு டெஸ்ட் சதங்களைப் பெற்றதன் மூலம் விவியன் ரிச்சர்ட்ஸ் நிகழ்த்தியிருந்த உலகசாதனையை சமப்படுத்தினார். (செ-10)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 9 பெண்கள் உட்பட 16 பேர் அஸாமில் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது பெண்கள் உட்பட பதினாறு பேர் கொல்லப்பட்டனர்.

போடோலான் தேசிய ஜனநாயக முன்னணி என்ற தடைசெய்யப்பட்ட தீவிரவாத அமைப்பே இத்தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகள் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளை தீவைத்துக் கொழுத்தினர் என்றும் இச்சம்பவத்தில் இரண்டு குழந்தைகள் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

33 இலட்சத்து 80 ஆயிரம் போடோ பழங்குடியின மக்களுக்காக இந்த அமைப்பு தனிநாடு கோரிப் போராட்டம் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (5)

## சம்பளமின்றி பணியாற்றிய அரச ஊழியர்கள்

(காபூல்)

சம்பளம் எதுவுமின்றி பணியாற்றிய ஆப்கானிஸ்தானின் அரசாங்க ஊழியர்களுக்குஅந்நாட்டின் இடைக்கால அரசு சம்பளம் வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

கடந்த மூன்று நான்கு மாதங்களாக சம்பளம் எதுவுமின்றி அவர்கள் பணியாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய அரசாங்கம் பதவியேற்றகடந்த டிசம்பர்மாதத்திலிருந்தே சம்பளம் வழங்கப்படவுள்ளது.

எனினும் தலிபான் ஆட்சியில் வழங்கப்படாத சம்பளம் பற்றி புதிய அரசாங்கம் எந்த விதமான உறுதி மொழியையும் வழங்கவில்லை. இதனால் அரச ஊழியர்கள் பலர் மன முடைந்த நிலையில் தமது கடமைகளைத் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-5)

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிமனையின் நிருவாக உத்தியோகத்தர் சி. புலேந்திரராஜா சிறப்பு விருந்தினராககலந்து கொள்ளவுள்ளார். (செ-19)

## உதைபந்து வலைப்பந்து போட்டிகள்

(எழாலை)

தெல்லிப்பழைபிரதேசசெயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள் இன்று பி.ப. 3.30மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன (செ-12)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருந்தலும் வல்லது அமைச்சு

குறள்

# வலம்புரி

## நம்பிக்கை தருகிறது!

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அரசு ஆராயும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் சாத்தியமான விடயங்கள் குறித்து ஆராய்வது அவசியம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருப்பது, சமாதானத்தில் அவர் கொண்டுள்ள அக்கறையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை என யார் கூறினாலும் அஃது புலிகள்மீதான தடையை நீக்குவதன் மூலமே சாத்தியமாகும் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. அவ்வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த ரணில் விக்கிரமசிங்கா தீர்மானித்துள்ளார் என்றே கருதவேண்டும்

எனினும் அவரது கருத்து வெளிப்படையாகவன்றி மறைமுகமாக இருப்பது ஏன் என்றகேள்வியையும் தோற்றுவிக்கவே செய்யும்.

புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி வெளிப்படையாக அறிவிப்பது ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற இனவிரோதக் கட்சிகள் சீற்றம் கொள்ளக் காரணமாக அமையலாம். என்பதற்காகப் பிரதமர் மறைமுகமாகத் தனது கருத்தைக் கூறியிருக்கலாம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தலைவர் பிரபாகரனே நாட்டின் ஜனாதிபதி என பொது ஜன ஐக்கிய முன்னணி பிரசாரம் செய்த போதிலும், சிங்கள மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தமது வாக்குகளை வாரி வழங்கினர் என்றால் அதன்பொருள் என்ன ?

பிரபாகரன் நாட்டின் ஜனாதிபதியாக வந்தாலும் நாம்இனத்துவேஷம் காட்டமாட்டோம். எமக்கு வேண்டியது சமாதானமே. அச்சமாதானம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே ஏற்பட முடியும் என்பதையே சிங்களமக்கள் தமது வாக்குப்பலத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் புலிகளின் தடையை நீக்குவதாக பிரதமர் ரணில் வெளிப்படையாக அறிவிக்கின்ற போதே அவரை நம்பிவாக்களித்த மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொள்வர்.

---

மறைந்தார் மாண்பு

# 4 வது தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த முன்னின்றுழைத்த அமரர் ச. அம்பிகைபாகன்

சென்ற நூற்றாண்டின் மத்திய பகுதியில் எமது மொழி மத ரீதியாக மாபெரிய உத்வேகத்தை ஏற்படுத்த தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர் வரிசையில் அமரர் ச. அம்பிகை பாகன் குறிப்பிடத்தக்கவர். இவர் சிறந்த ஆசிரியர், சிறந்த அதிபர், கண்ணியமான எழுத்தாளர், நிதானமான பேச்சாளர், கூரிய சிந்தனையாளர், அமைதியான ஆத்மீகத் தலைவர் இப்படி இவர் பணிகளை அடுக்கிச் சொல்ல முடியும். அத்தகைய பெருமகனை இழந்து பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன.

கப்பல்வளவு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் மல்லாகத்தைச் சொந்த வதிவிடமாகவும் கொண்ட இவர், 1908ம் ஆண்டு பங்குனி மாதம் மூன்றாம் திகதி பிறந்தார்.

இவரின் தந்தையார் சங்கரப்பிள்ளை, தாயார் சிவகாமசுந்தரி. தனது ஆரம்பக் கல்வியை பெரியார் துரையப்பா நிறுவிய ஆங்கில வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் பயின்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். சென்னையில் இவர் இருந்த காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணமட சுவாமிகளுடன் நெருங்கிப்பழகியமை தான் பெற்ற கல்வியை ஆத்மீகத்துடன் இணைத்துக் கொள்ள நன்கு உதவியது.

சுவாமி விபுலானந்தர் தொடர்பு

இவர் பட்டம் பெற்று நாடு திரும்பிய காலத்தில் வேலை வாய்ப்பு அரிதாகவே காணப்பட்டது. இச் சூழ்நிலையில் சுவாமி விபுலானந்த அடிகளாருடன் ஏற்பட்ட தொடர்பு மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிய வாய்ப்பேற்படுத்தியது. இவருக்கு இராமகிருஷ்ணமிஷன் மடத்தில் தம்மோடு தங்குவதற்கு அடிகளார் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தார். அடிகளாரும் இவரும் சைவத் தமிழ் நூல்களிலுள்ள பல நுண்ணிய விடயங்களை கலந்துபேசி உரையாடி மகிழ்வார்கள்.



சங்கப் பலகை

1935 ஆம் ஆண்டு வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபராக இவர் நியமனம் பெற்றார். ஓய்வு பெறும்வரை இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக ஓயாது உழைத்தார். இவர் அதிபராக இருந்த காலத்தில் வண்ணை வைத்தீஸ்வராக்கல்லூரியைத் தமிழ்ப் புலவர் கூடும் சங்கப் பலகையாகவே மிளிரச் செய்தார். முன்னாள் அமைச்சர் ஸ்ரீ மான் சு. நடேசபிள்ளை, சைவசித்தாந்த வித்தகர் சி. என். சிங்காரவேலு, விபுலானந்த அடிகள், தொல்காப்பியக்கடல் பிரம்மஸ்ரீ சி. கணேசையர், தனிநாயகம் அடிகளார், சைவசித்தாந்த வித்தகன் சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஆத்மஜோதி நா. முத்தையா, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள துணைவேந்தர் சு. வித்தியானந்தன், சட்டத்தரணி ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோர் இச் சங்கப் பலகையில் உளம்விட்டுப் பேசி மகிழும் அறிஞர்களாவர்.

இந்தக் காலப்பகுதியில் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாசாலைப் பகுதியில் பெரியார் அம்பிகைபாகனுடன் ஒரு தமிழறிஞர் கூட்டம் வந்த அறிஞர்களின் அன்பைப் பெற்று 4 வது தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவரும் இவரே ஆவார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் இம்மாநாடு யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த மாநாட்டுப் பணிகளில் அல்லும் பகலும் உழைத்து வந்தவர் அமரர்.

மாநாட்டில் வேண்டாத அசம்பாவிதங்கள் நடைபெற்ற போதும், இம்மாநாடு ஈழத் தமிழர் வரலாற்றில் புதியதோர் உத்வேகத்தையே உருவாக்கி விட்டது.

தமிழ் மக்களிடையே தமிழுணர்வைச் சுடர்விடச் செய்த பெருமை இம் மாநாட்டிற்கு உண்டெனில் மிகையாகாது. இத்தகைய தமிழுணர்வால் பல்வேறுபட்ட இன்னல்களை தமிழினம்எதிர் கொண்டாலும் உண்மை என்றோ ஒருநாள் வெல்லும் என்பதை உணரக் கூடியதாக எம்மை ஆக்கிவிட்டது.

இவரிடமிருந்த தமிழுணர்வும் நாட்டுப்பற்றும், காந்திய வாழ்வும் எவரிடத்திலும் காணமுடியாதவொன்று. கதர் அணிந்த தோற்றமும்' மடித்த சால்வைபுரளும் மார்பும், திருநீறு ஒளிவீசும், நெற்றியும் கம்பீரமான நடையும் கொண்டவர்.

இல்லற வாழ்வுக்கும் சேவை நலனுக்கும் வளமூட்டுவதில் பேராதரவு நல்கிய பெருமை இவர் மனைவி திருமதி நகுலாம்பிகையம்மையாருக்குண்டு எனலாம்

ஆத்மீகப் பணிகள்

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளுடன் நெருங்கிப் பழகி பல ஆத்மீக அனுபவங்

சி. சக்திகிரீவன்

செயலாளர் இந்துசமயப் பேரவை

திரண்டு காணப்பட்டது. தமிழ் படித்தவர்களை ஆங்கிலம் படித்தவர்கள் ஒதுக்கி வைத்த காலத்தில் அம்பிகைபாகன் மேற்கொண்ட பணிகள் அந்தப் போக்கை மாற்றியமைக்க வழிசமைத்தது.

இளைஞர் சமுதாயத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு இவர் மேற்கொண்ட திட்டங்கள் இவரை இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குள்ளவராகத் திகழவைத்தது. இதன்மூலம் பெற்ற இளைஞர் பலத்தை ஆத்மீகப் பணிகளுக்கு ஒருமுகப்படுத்த உதவினார்.

தமிழாராய்ச்சி மாநாடு

இவர் தொடர்புபட்டு நடத்தப் பெற்ற தமிழ், சைவ மாநாடுகள், வரலாற்றில்என்றும் ஆழப்பதிந்தே உள்ளன. மூன்றாவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு பரீஸ் மாநகருக்குச் சென்ற போது அங்கு களைப் பெற்று மகிழ்ந்துள்ளார். திருக்கேதீஸ்வரத் திருப்பணிகளோடு நிறைந்த தொடர்புடையவராகத் திகழ்ந்தவர். தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தான பணிகளோடு இணைந்து செயற்பட்டவர். இலக்கிய கலாநிதி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கொண்டறஅப் கணிகளுக்கும் ஆத்மீகப்பணி பளுக்கும் ஆதரவு வழங்கியவர்.

இத்தகைய பெருமைபெற்ற சைவப் பெரியார் அம்பிகை பாகன் 1986 ஆம் ஆண்டு தைமாதம் 26 ஆம் நாள் அமரத்துவம் அடைந்துள்ளார். அவரதுஅருந்தொண்டுகளைத் தொடர்வதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

---

# சாயி அருளமுதம்



மனித உயிர்கள் இப்பொழுது அழுக்கின்மேல் அழுக்கைச் சுமத்தி, வளைந்து முறிந்து, நோய்வாய்ப்பட்டு, பெருந்துயரத்துக்குள்ளாகி, மனமுடைந்து காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய வாழ்க்கையை வளம் படுத்தவும், மனிதப் பிறப்பின் உரிமையைப்பெறுமதியுடையதாக்கவுமே நான் வந்துள்ளேன். சேவையின் மீது பிரார்த்தனை மனப்பாங்கு கொள்வதைக் கற்பிக்கவே நான்இவ்வளவு உற்சாகத்தை வெளிக்காட்டுகிறேன்.

ஏனெனில் அன்பு எனப்படுவது சேவையின் வாயிலாகவே வெளிக்காட்டப் படுகிறது. சேவையின் மூலம் அன்பு வளர்ச்சியடைகிறது. சேவையின் கருப்பையிலேயே அன்பு தொடங்குகிறது. அன்பே கடவுளாகும். பையனாகவும், ஆண்களிடையே ஆண்மகனாகவும், பெண்களிடையே பெண்ணாகவும் விளங்குகிறது. அவதாரத்தின் நற்செய்தி ஒவ்வொரு இதயத்தையும் சென்றடைந்து அதன் மூலம் ஒவ்வொரு இதயமும் 'ஆனந்தம்' எனப்படும் எதிர்விளைவைப் பெற வேண்டுமென்பதே அதன் காரணமாகும். அவதாரத்தின் காருண்யமே அவருடைய ஒவ்வொரு செயலையும் தூண்டுகிறது.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

---

# திருமலை-கண்டிவீதி செவ்வாய் தொடக்கம் திறந்து விடப்பட்டுள்ளது

(திருகோணமலை)

திருகோணமலை கண்டி வீதி நேற்று முன்தினம் முதல் இருபத்திநான்கு மணிநேரமும் பயணிகள் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப் பட்டுள்ளது.

இப்பாதையே திருகோணமலையிலிருந்து கண்டி கொழும்பிற்கு செல்லும் பிரதான பாதையாகும்.

முன்னர் மேற்படி பாதை காலை 10.00 மணிமுதல் இரவு 10.00மணிவரை திறந்து விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு அஸ்கிரிய மகாநாயக்கர் மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்கி வடக்கு கிழக்கிற்கு சுயாட்சி வழங்க வேண்டுமென தான் கூறியதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை அஸ்கிரிய மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுகம புத்தர கித்தர தேரர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில்:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்க வேண்டும் என்றும், வடக்கு கிழக்கிற்கு சுயாட்சி உரிமை வழங்கவேண்டும் என்றும் நான் கூறியதாக வந்த செய்திகள் பத்திரிகைகளால் திரித்துக் கூறப்பட்டுள்ளது இதை நான் முழுமையாக மறுக்கின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தால், அவர்கள் மீதான தடையை நீக்குவது பற்றி பரிசீலிப்பது அரசாங்கத்தின் கடமையாகும், ஆனால் புலிகள் மீது சர்வதேச நாடுகள் விதித்துள்ள தடையில் அரசாங்கம் எந்த விதமான முடிவும் வெளியிடக் கூடாது என்று அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (வ)

## புதிதாக பத்து அரசியல் கட்சிகள்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்து புதிதாக சுமார் பத்து அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட இருப்பதாக தேர்தல் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன் இக்கட்சிகளின் பதிவு இடம்பெற உள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பொ.ஐ.மு எம்.பீக்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளனர் பொதுத்தேர்தலின் பின்னர் கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து அரசு எவ்வித கவனமும் செலுத்தாமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே இவர்கள் வெளிநடப்பு செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ந.4)

### புலிகள்...

பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஒரு கால எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஏன்னெனில் பயங்கரவாதத்திற்கு எதிரான நிலைமைகள் சர்வதேசத்தில் முக்கியம் பெற்றிருக்கும் இவ் வேளையில் பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டுவருவதே சிறந்தது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ள இருக்கும் ஒப்பந்தத்தில் நாடளாவிய ரீதியான போர் நிறுத்தம், பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகள், ஜனாதிபதியின் மேற்பார்வையில் விமானப் படையின் உதவியோடு புலிகள் கடல்வழியாக ஆயுதங்கள் கடத்துவதை கடற்படையினர் தடுப்பது, மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுவதை உறுதிசெய்தல், ஆகிய சரத்துக்கள் இடம்பெற வேண்டும்.

அத்துடன் யுத்தநிறுத்த நடைமுறைகளை சர்வதேச சமூகமே கண்காணிக்க வேண்டும் என்றும் கதிர்காமர் கூறினார். (இ)

(மற்றொரு செய்தி 4ம் பக்கத்தில்)

### பொலிஸார்...

போது இராணுவத்தினர் அதனை கவனத்தில் எடுக்காது சென்றுள்ளனர் இதனால் விசனமடைந்த பொலிஸார் அத்துமீறிச் சென்ற இராணுவத்தினரை நோக்கித் தாக்குதல் நடத்தினர் இதனால் இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலினால் இரு பொலிஸாரும் மூன்று படையினரும் மற்றும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி முழுவதும் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை பெரும் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பதற்ற நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரிகேடியர் தம்பிக்க, கண்டி பொலிஸ் அத்தியட்சகர் ரட்ணவீர ஆகியோர் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### நாகர்கோவில்..

இச்சந்திப்பின்போது எல்லைப்புறத்தில் காவல் கடமையில் உள்ள படைவீரர்களின் சேமநலன்கள் விசாரித்து அறியப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கொண்டு வரும் சமாதான நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த ஜெனரல் லயனல் பலகல்ல அரசினதும், விடுதலைப் புலிகளினதும் போர் ஓய்வு அறிவிப்பு எல்லைப்புறத்திலுள்ள படைவீரர்களுக்கு சற்று ஓய்வைக் கொடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார்

யாழ் குடாநாட்டு மக்களும் படை வீரர்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து அமைச்சரும், இராணுவத்தளபதியும் விசாரித்து அறிந்து கொண்டனர்.

இதேவேளை இராணுவத்தளபதியுடனான அமைச்சரின் விஜயம் படைவீரர்கள் மோதல் தவிர்ப்பை அனுசரித்து வருகிறார்களா என்பதை அறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (வ)

## பிரதிச் செயலராக பத்மநாதன்

திறைசேரியின் பிரதிச் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த என்.பத்மநாதன் அமைச்சரவையினரால் நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பை சேர்ந்த என்.பத்மநாதன் பல்வேறு அமைச்சுக்களின் நிலைகளில் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## உயர் நீதிமன்றத்தின் ஆவண அலுவலகம் சீல் வைத்து மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ள அலுவலகம் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று சீல் வைக்கப்பட்டுள்ளது.

வழக்குச் சம்பந்தமான ஆவணங்களுடன் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலர்களை உயர் நீதிமன்றத்தில் பணிபுரியும் ஊழியர்கள் சிலர் கையாடியதாலேயே அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறில் நாணயக்கார தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்ற ஊழியர்கள் இருவர் உட்பட நான்கு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந.4)

## அனுருத்தவின் புதல்வர்கள் பொலிஸில் சரணடைந்தனர்

(கொழும்பு)

கண்டி உடவளவ பிரதேசத்தில் பத்து முஸ்லீம் இளைஞர்கள் தேர்தல் தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து தேடப்பட்டு வந்த முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் இரு புதல்வர்களும் நேற்று தெல்தெனிய பொலிஸில் சரணடைந்துள்ளனர். (வ)






யாழ். கல்வி வலய அலுவலக ஊழியர் நலன்புரிக்கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலயக்கணக்காளர் துரைசிங்கம் மங்களவிளக்கேற்றி வைப்பதையும், அருகில் வலய உத்தியோகத்தர்கள் நிற்பதை முதலாவது படத்திலும், அருகில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திலகநாயகம்போல், கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ்.மகாலிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. இ.சண்முகரத்தினம், நிர்வாக உத்தியோகத்தர் இ.நாகராஜா ஆகியோர் உடபட வலய உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும், க.தெய்வகுலராஜா உரையாற்றுவதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.

மிக விரைவில் எதிர்பாருங்கள்

"வலம்புரியின் வாரமலர்"

உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது

உடன் தேவை

உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது

| | |
|---|---|
| இலக்கியநயம் | கவிதை |
| சிறுகதை | கட்டுரை |
| நாவல் | பேனா நண்பர்கள் |
| சிறுவர் சிந்தனை | மங்கையர் பகுதி |
| அரசியல் விளாசல் | கேள்வி பதில் |
| வியாதிக்கு விளக்கம் | |

(உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுநர்களின் பதில்)

## இன்னும் பல.. பல..

உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா?
விரைந்து அனுப்புங்கள்.

ஆசிரியர்
வலம்புரி வாரமலர்
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும், க.தெய்வகுலராஜா உரையாற்றுவதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.


## உடன் தேவை

**கணனி பக்க அமைப்பாளர்**
**COMPUTER PAGE MAKER**

உடன் தேவை
அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்.
(இருபாலாரும்)

நிர்வாக முகாமையாளர்

'வலம்புரி'
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

பாதுகாப்பு உத்தியோகஸ்தர் பதவிக்கு ஆட்தேவை. க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்த 35 வயதிற்கு மேற்பட்ட உடல் ஆரோக்கியமானவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

நிர்வாக முகாமையாளர்

வலம்புரி
இல.15,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.